# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION



JANUARY—1955



யூகஸ்லேவியா தலைவர்
மார்ஷல் டிடோ

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1.

# ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818


---

## "ஆரம்பக்கல்வி" இனாம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது **"புதுமுறை சங்க வாசகங்களை"** அல்லது **"வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை"** பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50–க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, **"ஆரம்பக்கல்வி"** மாதப் பத்திரிகையை இனாமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும்.

### புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கேஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 19 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 22 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 23 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 23 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 23 | 19–5–'54 |

### வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19–5–'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19–5–'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19–5–'54 |

### கதைப் புத்தகங்கள்

( . S. அருணகிரிநாதர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19–5–'54 |
| **பாலர் கதா போதினி** ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 29 | 19–5–'54 |

CONNEMARA PUBLIC LIBRARY




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

T15 ... N40
3 75

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணா.

மலர் 16 } ஜனவரி 1955 { இதழ் 1

# பதினாறாவது ஆண்டு!

25 A 306

"பத்திரிகையா நடத்தப் போகிறாய்?"

"அதுவும் இந்த அப்பாவி ஆசிரியர்களை நம்பியா?"

"முடியுமா உன்னால்?"

"முடியுமா என்பதுகூட இருக்கட்டும். தேவையான காரியம் தானா?"

"வேண்டாமப்பா இந்த வீண்முயற்சி, வேறு உருப்படியான வேலையைப் பார்."

"நான் சொல்வதைக் கேள். இது மிகவும் ஆபத்தான காரியம்!"

"ஆழம் தெரியாமல் காலைவிடாதே. அன்போடு சொல்கிறேன்—அவசியமாய்க்கேள்."

இப்படித்தான் பலரும் பேசினர்—பேசினரா—ஏசினர்—தூற்றல் பாணங்களையும் சுடுசொல் அம்புகளையும் வீசினர்—ஆகாதவேலை, கூடாத காரியம், ஆபத்தான பாதை என்றெல்லாம் அச்ச அலைகளைக் கிளப்பினர் — பதினைந்தாண்டுகளுக்கு முன்பு — அதாவது நாம், "ஆரம்பக் கல்வி" என்னும் இத் திங்கள் இதழைத் தொடங்கிய நேரத்தில்,

ஆனால் இப்போதோ ?

"பத்திரிகையைப் படிக்கிறோம்—மட்டற்ற மகிழ்ச்சி யடைகிறோம்."

"அருமையான பணியப்பா இது—அற்புதமான தொண்டு"

"ஆரம்ப ஆசிரியர்கள் அத்தனைபேரும் வாழ்த்துகின்றனர்."

"ஆசிரியர் உலகத்தின் எழுச்சி முரசல்லவா இது ?"

"ஆயிரமாயிரம் ஆசிரியர்களின் இருதய கீதமல்லவா இந்தப் பத்திரிகை ?"

"எங்களுடைய ஓயாத துயரத்துக்கிடையேயும் தீராத இன்பத்தைத் தந்திடும் இன்சுவை அமுதம் இந்த இதழ்"

"வருக "ஆரம்பக் கல்வி"! வாழ்க ஆரம்பக் கல்வி!"

இப்படித்தான் பேசுகின்றனர்—பேசுவதுமட்டுமா—கடிதங்கள் தீட்டுகின்றனர்—கவிதைகளும் வரைகின்றனர் — வாழ்த்துகளும் பாராட்டுகளும் வந்து குவிந்தபடி இருக்கின்றன.

வேண்டாம் தம்பி இந்த வேலை என்று எச்சரிக்கை அந்தாதி பாடப்படுகிற நிலை மறைந்துவிட்டது. எவ்வளவு அருமையான செயல், எத்தனை இனிமையாகச் செய்கிறாய் என்று பூரிப்போடும் புன்னகையோடும் பேசிடும் புதிய சூழ்நிலை உருவாகிவிட்டது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு நாம் "ஆரம்பக் கல்வி" என்னும் இந்தத் திங்கள் இதழைத் தொடங்கியபோது, "ஆபத்துக்கள் அடுக்கடுக்காக வரும், ஆதலால் நண்பனே, விழிப்போடிரு" என்று தோழர்கள் பலரும் எடுத்தெடுத்து இயம்பினர் என்றால் அது வெறும் வேடிக்கைப் பேச்சல்ல. அனுபவ பூர்வமான உண்மை. அவர்களெல்லாம் அபாய அறிகுறி காட்டியது போலவே, பத்திரிகை தொடங்கப்பட்டதும், ஆபத்துக்கள் அலையலையாக வரத்தான் செய்தன. அடிக்கு அடி, அங்குலத்திற்கு அங்குலம், நம்முடைய பயணத்தில் சங்கடங்களும் சஞ்சலங்களும் புற்றீசலெனப் புறப்படத்தான் செய்தன. ஆசிரியர்களின் அலட்சியம் ஓர் புறம்

அதிகார வர்க்கத்தின் முணுமுணுப்பு மற்றோர் புறம், ஒன்றும் தெரியாததுகளின் உறுமலும் மிரட்டலும் இன்னோர்புறம், கிடுகிடுவென உயர்ந்துவந்த விலை வாசிகளின் பயங்கர நடனம் வேறோர் புறம், இந்தவிதமாகத் தொல்லைகள் பற்பல எல்லையின்றி ஏற்படத்தான் செய்தன.

சிறிதுசிறிதாகத்தான் முன்னேற முடிந்தது—தொல்லைகளும் துயரங்களும் படிப்படியாகத்தான் அகலத் தொடங்கின—ஆரம்ப ஆசிரியர்களின் அன்பும் ஆதரவும் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளரத் தொடங்கின—ஆனால் தொல்லைகள் குறைந்து; இடுக்கண்கள் அகன்று, ஆசிரியர்களின் அன்பு உள்ளத்திலே நமக்கென்று ஓர் இடமும் கிடைத்து விட்ட பிறகு, முன்னேற்றம் முழுவேகத்தை அடைந்தது. ஏடு, இன்றைய சிறந்த நிலையைப்பெற்றது.

"**ஆரம்பக் கல்வி**", அது தொடங்கப்பட்ட நாள் முதலாக இன்றையவரை, ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்திற்காக ஓயாமல் உழைத்து வந்திருக்கிறது என்பதை, எவரும் மறுத்துவிட முடியாது. ஆரம்ப ஆசிரியர்களின் மனக் குறைகள் என்னென்ன—அவர்களுடைய ஊதியத்திலேயும் பிற வசதிகளிலேயும் எத்தகைய மாற்றங்கள் தேவை—எந்தெந்தச் செயல்களில் அரசாங்கம் ஈடுபட்டால் ஆசிரியர்களின் நிலைமை உயரும் என்பவற்றையெல்லாம் எடுத்துச் சொல்ல நாம் எந்த நேரத்திலும் தயங்கியது கிடையாது.

ஆசிரியர்களின் துயரங்கள் இப்படிப்பட்டவை — எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

அவற்றைப் போக்குவதற்குத் தேவையான ஆக்கவேலைகள் இன்னின்னவை—வரிசை வரிசையாகத் தெரிவித்திருக்கிறோம்.

ஆசிரியர்களின் நிலை உயர்ந்தாலொழிய கல்வியின் நிலை உயராது. கல்வியின் நிலை உயர்ந்தாலொழிய நாட்டின் நிலையும் உயராது—இதனையும் நாம் தெள்ளத் தெளிவாக அறிவித்திருக்கிறோம்.

ஆயிரமாயிரமாக உள்ள ஆரம்ப ஆசிரியர்களுக்காக, அவர்களுடைய வாழ்க்கையை வதைக்கும் வறுமை அடியோடு அழியவேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துக்காக, அந்த வறுமையில் கொடுக்குகள் நறுக்கி யெறியப்படவேண்டுமானால் அரசாங்கத்தின் மனப்போக்கில் மகத்தானதோர் மாறுதல் தேவை என்னும் சீரிய உண்மையைச் செந்தமிழ் நாடு முழுவதும் அறியச் செய்வதற்காக், மாதந்தோறும் "**ஆரம்பக் கல்வி**" தன்னாலான முழுப் பணியையும் செய்துவந்திருக்கிறது.

சூண்டிச் சோர்ந்த முகமும், மெலிந்து தளர்ந்த கைகளும், வாடி வதங்கிய உள்ளமும் படைத்தவர்களாய் இல்லாமல், நிமிர்ந்த

நடையும், நேர் கொண்ட பார்வையும், அஞ்சாத நெஞ்சமும், அஞ்சியாத உறுதியும் படைத்த கட்டிளங் காளைகளாய், வீரத்தின் சின்னங்களாக விளங்கும் வீறு மிகுந்தவர்களாய், உருவாகிவரும் புதிய சகாப்தத்தின் உன்னதமான தூதவர்களாய் ஆரம்ப ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என்பது நமது பேராசை.

ஆரம்ப ஆசிரியர்களின் பார்வையிலே ஒரு கம்பீரம்! அவர்களுடைய உரையாடலிலே ஓர் மட்டற்ற மகிழ்ச்சி! அவர்களுடைய குடும்பங்களிலே ஓர் இணையற்ற குதூகலம்! இத்தனையும் தோன்றியாக வேண்டும் என்பது நமது இலட்சியம்.

ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை உயர்ந்தாக வேண்டுமானால் அவர்களுக்குப் போதுமான அளவு ஊதிய உயர்வு கிடைத்தாக வேண்டும். ஆமாம். ஆனால் அதுமட்டும் போதும் என்று நாம் எப்போதுமே கருதியதில்லை. ஒரு புறம், ஊதியத்தின் நிலைமை உயரத்தான் வேண்டும். அதே சமயம், மற்றோர் புறம், ஆசிரியர்களின் உள்ளமும் விரிந்து பரந்து, புத்தம் புதிய எண்ணங்களின் விளைநிலமாக மாறி, புதுவாழ்வை அடையவேண்டும். சமுதாயத்தின் சீர்கேடுகளை அகற்றி அதனை மாற்றி அமைத்து மறு கோலம் செய்யும் மகத்தான பணியிலே ஆசிரியர்கள் முதல் இடம் பெற்றாக வேண்டும். நம் நாட்டின் முற்போக்குக்கெல்லாம் முதல்தரமான முட்டுக்கட்டையாக இருக்கும் தலைவிதி தத்துவத்தை மண்டையிலடித்து மாய்க்க வேண்டும ஆரம்ப ஆசிரியர்கள். எடுத்ததற்கெல்லாம் ராசி பலனைப்பார்த்துக் கொண்டு, தொட்டதற்கெல்லாம் சடங்கு சாஸ்திரம் சம்பிரதாயம் என்று பேசிக்கொண்டு, முன்னேற்றப் பாதையைக் கண்டெடுத்தும் பார்க்காதிருக்கின்ற கொடுமையை ஆசிரியர்கள், தூள்தூளாக உடைத்தெறிய வேண்டும். மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தவும், சாதி சாதி என்று பேசிச் சீரழியும் சிறுமையை அழிக்கவும், மதத்தின் பெயரைச் சொல்லி மக்களைச் சுரண்டும் சூது மதியினரை அடக்கவும் ஆசிரியர்களின் தொண்டு பயன்பட்டாகவேண்டும். ஆரம்ப ஆசிரியர்கள், தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமல்ல, அந்த மாணவர்களை உருவாக்கிய இந்தப் பரந்த சமுதாயத்துக்கே சிறந்த வழிகாட்டிகளாக விளங்கவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை உயர்வேண்டும் என்பதில் நமக்கு எந்த அளவு அக்கறை உண்டோ அதே அளவு அக்கறை ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியிலும் உண்டு. நாடு நகரம் பட்டி தொட்டி எங்கெங்கும் பள்ளிக்கூடங்கள் ஏற்படவேண்டும். படிக்கும் வயது வந்த எல்லாச் சிறுவர்களும் எல்லாச் சிறுமிகளும் பள்ளிக்குச் சென்றாக வேண்டும். கட்டாய இலவச ஆரம்பக் கல்வி நாடு

முழுமையும் பரவவேண்டும். கல்லாமை என்பது இந்நாட்டில் இல்லாமல் போக வேண்டும். இவை நம் நோக்கங்கள்.

ஆரம்ப ஆசிரியர்களின் நிலை உயராமல் ஆரம்பக் கல்வியின் நிலை உயரமுடியாது. அதுபோலவே ஆரம்பக் கல்வியின் நிலை வளராமல் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையும் சிறப்படைய முடியாது. இவை இரண்டும் ஒன்றை ஒன்று தழுவிக் கொண்டிருக்கின்றன. எனவே இவை இரண்டும் இணைந்து நின்றே வளர்ந்தாகவேண்டும்.

எனவேதான் நமது ஏடு "**ஆரம்பக் கல்வி**" இந்த இரு இலட்சியங்களையும் தன் இரு கண்களெனக் கொண்டு சென்ற பதினைந்து ஆண்டுகளாகப் பணியாற்றியிருக்கிறது. இனியும் அது போலவே பணியாற்றத் தயங்காது.

யார் யார் "**ஆரம்பக் கல்வி**யின்" அன்பர்களாகவும் ஆதரவாளர்களாகவும் சந்தாதாரர்களாகவும் இருந்திருக்கிறார்களோ, யார் யார் "**ஆரம்பக் கல்வி**"யின் வளர்ச்சிக்காகத் தங்களுடைய அருமையான எழுத்தோவியங்களைத் தீட்டி உதவியிருக்கிறார்களோ, யார் யார் "**ஆரம்பக் கல்வி**" நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு பாடபுத்தகங்களைத் தங்கள் பள்ளிகளில் வைத்துப் பேருதவி புரிந்திருக்கிறார்களோ, யார் யார் தங்களுடைய அன்பு நிறைந்த உள்ளத்தாலும், ஆர்வம் நிறைந்த சொற்களாலும், ஆதரவு ததும்பும் செய்கைகளாலும் "**ஆரம்பக் கல்வி**"யின் வீரவாழ்வு வெற்றியுடன் விளங்க வழிவகுத்துத் தந்திருக்கின்றனரோ, அவர்கள் அத்தனைப் பேருக்கும், தன்னுடைய பதினாறாவது வயதைத் தொடங்கும் இந்த நேரத்தில், "**ஆரம்பக் கல்வி**", தன்னுடைய உள்ளம் நிறைந்த மகிழ்ச்சியையும், அன்பு நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. ஆரம்ப ஆசிரிய உலகம் இதுவரை அளித்ததுபோலவே, இனியும் தன் அன்பையும் ஆதரவையும் "**ஆரம்பக் கல்வி**"க்கு அளித்து வரும் என்பதிலே நமக்குத் துளியும் ஐயமில்லை. ஆரம்ப ஆசிரியர்களின் அருமைப் பிள்ளைதானே "**ஆரம்பக் கல்வி**"! எந்தத் தந்தைதான் தன் அன்புள்ள பிள்ளையை ஆதரிக்காமல் இருக்கமுடியும்?

**வாழ்க ஆரம்ப ஆசிரியர்கள்!**

**வளர்க ஆரம்பக் கல்வி!**

# பொங்கலோ பொங்கல்!

ஆம்! பொங்கற் புதுநாள் பிறந்துவிட்டது. தமிழ்நாடெங்கும் இன்ப முழக்கம் தொடங்கிவிட்டது. மக்களின் முகத்திலெல்லாம் புன்னகையும் அகத்திலெல்லாம் ஆநந்தமும் இன்பநடனம் புரியத் துவங்கி விட்டன.

பொங்கற் புதுநாள் தமிழரின் திருநாள். தீதெலாம் களைந் தெறிந்து, நன்மையைப் பயிரிட்டு நற்பயன் என்னும் அறுவடை யைக் குவித்தெடுக்கும் பொன்னுள். இசையும் இன்பமும் யாண்டும் முழங்கும் நன்னுள். உழவின் மேன்மையை, உழைத்தால் வாழ் வுண்டு என்னும் உண்மையை, உழைப்பவர்க்கே உலகம் என்னும் உன்னதமான கருத்தை, உயர்தரமான முறையில் எடுத்துரைக்கும் உத்தம நாள்.

இதோ பொங்கலோ பொங்கல் என்னும் பூரிப்புக் குரல் தமிழ் நாடெங்கும் கேட்கிறது. இதுபோது, புத்தாடை உடுத்தி புது அரிசி யைப் பொங்கி புதுப்பொங்கல் கொண்டாடி புதுவாழ்வைத் தொடங் குகின்றனர் தமிழ்த் திருநாட்டினர்.

இன்றைய தினம் பொங்குவதுபோலவே என்றையதினமும் தமிழ் மக்கள்தம் உள்ளத்தில் இன்பம் பொங்கட்டும். மகிழ்ச்சி ததும்பட்டும். புதுமை பொலியட்டும். நல்வாழ்வு சிறக்கட்டும். வாழ்க தமிழகம். வளர்க தமிழ்ப் பொலிவு. ஓங்குக தமிழ் இனம்.

பொதுவாக தமிழ் மக்களுக்கும் சிறப்பாக ஆரம்ப ஆசிரியர்கட் கும் நமது பொங்கல் வாழ்த்துகள்.

## ஆரம்பக் கல்வி நிபுணர் குழுவிற்கு ஓர் வேண்டுகோள்

டாக்டர் அழகப்ப செட்டியார் தலைமையில் சென்னை அரசாங் கத்தால் நியமிக்கப்பட்டுள்ள ஆரம்பக் கல்வி நிபுணர் குழுவினர், தாங்கள் தயாரித்து அனுப்பியுள்ள கேள்விப் பட்டியலுக்குரிய விடைகளை, அனைவரும், பிப்ரவரி மாதம் முதல் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும் என்று தெரிவித்திருக்கின்றனர். ஜனவரி முதல் வாரத்தில்தான் பலருக்கும் கேள்விப்பட்டியல் கிடைத்திருக்கிறது. இன்னமும் பலருக்குக் கிடைக்கவில்லை. ஆசிரியர் சங்கங்களுக்கும் இந்தக் கேள்விகளை அலசி ஆராய்ந்து விடைகள் தீட்டி அனுப்ப சிறிது அவகாசம் தேவை. எனவே, விடைகள் அனுப்பவேண்டிய கால எல்லையை, பிப்ரவரி முதல் தேதிக்குள் என்று இருப்பதை, "மார்ச் முதல் தேதிக்குள்" என்று மாற்றி அமைத்தால் மிகவும் நல்லது. ஆரம்பக் கல்வி நிபுணர் குழுவினர், மிகப் பலருடைய கருத்தையும் அறிய வேண்டுமானால், கால எல்லையை ஒத்திப்போட வேண்டியது இன்றியமையாத பணியாகும். அவசியம் செய்வார் களென நம்புகிறோம்.

# நாட்டின் தலைவரான ஓட்டல் தொழிலாளி

ஓட்டலில் தட்டு கழுவும் வேலை பார்த்த சாதாரண தொழிலாளி தற்போது ஒரு முக்கிய ஐரோப்பிய தேசத்தின் தலைவராக இருக்கிறார். அவர்தான் யூகோஸ்லாவியா தேசத்தின் ஜனாதிபதி டிட்டோ. அவர் 16-12-54-ல் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். அதுமுதல் சென்ற இருபது நாட்களாக அவர் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து வருகிறார். இந்திய அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் அவர் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்.

ரஷிய கோஷ்டியில் சேராமலிருக்குள்ள ஒரே கம்யூனிஸ்டு தேசத்தின் தலைவர் டிட்டோ.

## விவசாயியின் மகன்

ஒரு ஏழை விவசாயியின் மகனாக 1892-ம் வருஷத்தில் டிட்டோ பிறந்தார். அவருடைய பெற்றோர்கள் அவருக்கு ஜோசப் புராஸ் என்று அப்போது பெயர் வைத்திருந்தனர். பண வசதி இல்லாததால் குறைந்த படிப்புடன் அவர் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறிவிட்டார்.

## தட்டு கழுவினார்!

பள்ளிக்கூடத்தை விட்டு நின்றதும் அவர் வேலை தேடி அலைந்தார். அவர் சொந்த கிராமத்தை விட்டு வெளியேறினார். வெகு தூரத்துக்கு அப்பால் உள்ள ஒரு நகரத்தில் ஒரு ஓட்டலில் தட்டு கழுவும் வேலைதான் அவருக்குக் கிடைத்தது. வயிற்றுப் பிழைப்புக்கு வேலை கிடைத்தது என்ற சந்தோஷத்துடன் அவர் அந்த வேலை பார்த்தார்.

## தொழிற்சங்கம் என்றால் என்ன?

சிறிது காலம் கழித்து பூட்டு தயாரிக்கும் தொழிற்சாலையில் அவர் வேலை பார்த்தார். அப்போது ஒரு தொழிற்சங்கத் தலைவருடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவர் மூலமாகத் தொழிற்சங்க இயக்கங்கள் பற்றி அவர் தெரிந்துகொண்டார்.

## வேலை தேடுதல்

அவர் மறுபடியும் வேறு வேலைக்காகத் தேடி அலைந்தார். சொந்த நாட்டில் வேலை தேடுவதை விட்டு விட்டு செக்கோஸ்லாவாகியா, ஜெர்மனி, ஆஸ்திரியா முதலிய தேசங்களில் அவர் சுற்றுப் பிரயாணம் செய்தார். கடைசியில் அவருக்கு ஆஸ்திரியா தேசத்தில் வேலை கிடைத்தது. ஆனால் வெகு சீக்கிரத்தில் அவர் கட்டாய ராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டார்.

## யுத்தக் கைதி

அவர், ராணுவ சேவை செய்து கொண்டிருந்த போது, முதலாவது உலக யுத்தம் மூண்டு ஆஸ்திரியா தேசத்தின் மீது ரஷியா படையெடுத்தது. போர் முனை

யில் டிட்டோ, ரஷியாவின் யுத்தக் கைதி ஆனூர். ரஷியாவின் யுத்தக் கைதியாக இருந்த காலத்தில், ரஷியப் புரட்சியை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. ரஷியப்புரட்சி, அவ்ருக்கு வழிகாட்டியாக விளங்கியது !

## கல்யாணம்

யுத்தம் முடிந்த பின்னர் ஒரு ரஷியப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு அவர் சொந்த நாட்டுக்குத் திரும்பினூர். யுத்தத்தின் காரணமாக நாடு சின்னு பின்னமாகக் கிடந்ததை அவர் பார்த்தார். நாட்டில் கம்யூனிஸ்டு கட்சியை அமைத்து அதைப் பலப்படுத்தும் வேலையில் அவர் ஈடுபட்டார். அதன் விளைவாக அவர் 5 வருஷம் சிறைவாசம் அனுபவித்தார்.

ரஷியாவுக்குப்போய்த் தொழிற் சங்க இயக்கம் பற்றி விரிவாகத் தெரிந்து கொண்டு டிட்டோ, நாடு திரும்பினூர். சிறிது காலத்துக்குள் யூகோஸ்லாவிய தேச கம்யூனிஸ்டு கட்சியின் காரிய தரிசி பதவி அவருக்குக் கிடைத்தது.

## இரண்டாவது உலக யுத்தம்

இரண்டாவது உலக யுத்தத்தின் போது யூகோஸ்லாவியா தேசத்தின் மீது ஜெர்மனி தேச சர்வாதிகாரி ஹிட்லர் படையெடுத்தார். 'யூகோ' தேசத்தின் அப்போதைய அரசாங்கம தோல்வியடைந்தது. 'யூகோ' தேசம் பல பகுதிகளாகத் துண்டாடப்பட்டது. யுத்தத்தில் வெற்றியடைந்த ஜெர்மனி, இத்தாலி தேசங்களின் ஆட்சி அங்கு நடந்தது.

கம்யூனிஸ்டு கட்சியை வெகு பலம் வாய்ந்த கட்சியாகத் திரட்டிய பின்னர், டிட்டோ விடுதலைப் போராட்டம் நடத்தினூர். போராட்டத்துக்கு வெற்றி மேல் வெற்றி கிடைத்தது.

## நாட்டின் தலைவர்

1945–ம் வருஷத்தில் டிட்டோ, 'யூகோ' தேசத்தின் பிரதம மந்திரியானூர். பின்னர் 1953–ம் வருஷம் ஜனவரி மாதம் 1-ந்தேதியிலிருந்து அந்த தேசத்தின் ஜனுதிபதியாக இருந்து வருகிறூர்.

அழிந்து கிடந்த நாட்டைக் காப்பாற்றி அதைப் பல்வேறு துறைகளில் முன்னேற்றத்துக்குக் கொண்டு வந்துள்ளவர் டிட்டோ. "யூகோ நாட்டின் சிற்பி" என்ற முறையில், மக்களின் நன்மதிப்பையும் அன்பையும் பெற்று அவர் தொடர்ந்து சேவை செய்து வருகிறூர்.

(தினத்தந்தி)

# அடிமை வாணிபம்

★

ஒரு மனிதன் தன் உரிமைகளை யிழந்து அதிகாரங்கொண்ட மற்றொரு மனிதனுக்குக் காலமெல்லாம் பணிசெய்து வாழவேண்டும் என்ற அடிமை முறை பழங் காலத்திலிருந்தே தோன்றியிருக்கிறது. இந்த அடிமை முறையைப் போற்றி வளர்த்ததில் பண்டைய உரோம, கிரேக்க நாடுகள் மேம்பட்டு விளங்கின. பிறநாட்டினர் மீது போர்தொடுக்குங் காலத்து, போரில் தோற்ற வீரர்களை, வெற்றி வீரர்கள் சிறைப்படுத்தித் தம் நாட்டிற்குக் கொணர்ந்து அடிமைகளாக விற்றனர். அரண்மனை வாசிகளும், உல்லாசபுரிச் சீமான்களும் இந்த அடிமைகளை விலைகொடுத்து வாங்கி, ஏவல்காத்து நிற்கும் பணியாட்களாக நியமித்தனர். கழனிகளைத் திருத்தி உழவுத் தொழில் புரியவும் அடிமைகள் பயன்பட்டதால் அடிமைகள் அதிகமாகத் தேவைப்பட்டனர். அடிமைகளை வைத்து விற்கும் வாணிபமும் வளரத்தொடங்கியது. ஏதன்சும், ரோமாபுரியும் அடிமை வாணிபத்தில் சிறந்து விளங்கிய நகரங்களாகும். அடிமைகளை விற்கத் தனியிடங்கள் உண்டாக்கப்பட்டன. அங்கு அடிமைகள் காட்சிப் பொருள்கள்போல் நிறுத்திவைக்கப்பட்டனர். மக்கள் அங்கு வந்து தமக்குப் பிடித்த அடிமைகளை விலை கூறிப் பெற்றுச் செல்வர். **சிரியா, லிபியா, கலாட்டியா, திரேஸ், எகிப்து, எத்தியோப்பியா** முதலிய நாடுகளிலிருந்து மனிதர்கள் அடிமைகளாகக் கொண்டுவரப்பட்டு விற்கப்பட்டனர்.

அரசாங்கமும் 'அடிமைவரி' என்ற வரி விதித்து அடிமை வாணிபம் நடத்தும் வணிகர்களிடமிருந்து பொருள் பெற்றுவந்ததால் அடிமை வாணிபம் எவ்விதத்தடையுமில்லாமல் வளர்ந்து வந்தது. மன்னர்களே அடிமை வாணிபம் நடத்திப் பொருள் சேர்த்தனர் என்று தெரிகிறது. மாவீரனை **சீசர்** ஒருமுறை 63,000 போர்க்கைதிகளை **கால்** நாட்டில் விற்றதாக வரலாறு கூறுகிறது. **கிளாடியஸ்** என்ற மன்னன் காலத்தில் ரோம் நாட்டில் இருந்த அடிமைகள் சுமார் 2,08,32,000 பேருக்குமேல் என்று தெரிகிறது.

கிரேக்க நாட்டைவிட ரோமாபுரிதான் அடிமை வாணிபத்தில் சிறந்து விளங்கியது. ரோம் நாட்டு மன்னர்கள் வெற்றி வீரர்களாகப் பவனி வந்த நேரத்தில் எண்ணற்ற எதிரிகள் அடிமைகளாகப் மாற்றப்பட்டு ரோமாபுரி நோக்கி இழுத்துச் செல்லப்பட்டனர். நல்ல உபயோகமான பொருள் எவ்வளவு அதிகமாக

விற்பனைக்கு வந்தாலும் அந்த வாணிபத்தில் வளர்ச்சி குறை யாது. அதுபோல அடிமை வாணிபமும் குறையாது, அடிமைகளின் தொகை ரோமா புரியிலும், சுற்றுப்புறத்திலும் அதிகரித்து வந்தது.

ஆனால் ரோம் சாம்ராஜ்யம் நெடுநாள் நிலைக்கவில்லை. பிற் பட்டுத் தோன்றிய ரோம் வீரர் களின் ஒற்றுமையின்மையால் சாம்ராஜ்யம் சரிந்தது. போர்கள் இல்லாததால் அடிமைகளின் இறக்குமதி குறையத்தொடங்கி யது. இதனால் வெளிநாட்டு அடிமை வாணிபம் குறைந்து, உள்நாட்டு வாணிபமும் குறைய ஆரம்பித்தது.

இதற்கிடையில் கிருஸ்தவ நெறி பரவ ஆரம்பித்து அடிமை முறை ஒழியவேண்டும் என்ற எண்ணம் வளரத்தொடங்கியது. மன்னர்களும் நாட்டின் நலன் கருதி அடிமை வாணிபத்தைத் தடுத்து அடிமை முறையையும் ஒழிக்க முன்வந்தனர். கிருஸ்தவ மதம் ஐரோப்பா எங்கணும்பரவி நல்ல ஆதிக்கம் பெற்றதால் எல்லா நாடுகளிலும் அடிமை முறை நீக்கப்பட்டது.

இப்படியாக மனிதனுக்கு மனி தன் அடிமை இல்லை என்ற புதிய தத்துவம் போதிக்கப்பட்டு அடிமை முறை ஒழிக்கப்பட்ட போதிலும் மறுபடியும் அது பதி னைந்தாம் நூற்றாண்டில் தலை காட்டியது. எந்த கிருஸ்தவமதம் அடிமை நீங்க எழுந்ததாக விளங்கியதோ அந்த மதத் தையே பின்பற்றிப் போற்றி வளர்த்த ஐரோப்பிய நாடுகள் மறுபடியும் அடிமை வாணிபத் தில் ஈடுபட்டன.

பதினைந்தாம் நூற்றாண்டின் மத்தியில் இருண்ட கண்டமா யிருந்த ஆப்ரிக்கா கண்டு பிடிக் கப்பட்டதோடு அங்கு தங்கம் போன்ற கனிப்பொருள்கள் கிடைக்கின்றன என்று தெரிய வந்தது. இதன் பேரில் ஐரோப் பிய நாட்டினர் ஆப்பிரிக்காவில் குடியேறிக் கோட்டைகள் கட்டி னர். ஆப்ரிக்காவில் நீக்ரோ இனத்தவர் காட்டுமிராண்டி களாக வாழ்ந்துவந்தனர். கடற் கரையோரம் குடியேறிய ஸ்பெ யின் நாட்டினர் பல நீக்ரோக் களைப் பிடித்துத் தாய்நாட்டிற்கு அடிமைகளாக அனுப்பினர்.

இதற்கிடையில் கொலம்பஸின் அமெரிக்கா கண்டுபிடிப்பு பல ஐரோப்பிய நாட்டினரை அமெ ரிக்காவுக்குக் கொண்டுசேர்த்தது; அங்கு வாழ்ந்த சிவப்பு இந்தியர் கள் வலுவற்றவர்களாகவும் உப யோகமற்றவர்களாகவும் தென் பட்டதால், அங்குள்ள கனிப் பொருள்களை எடுக்கவும், பருத்தி புகையிலைத் தோட்டங்களை உண் டாக்கவும் வலுப்பெற்ற நீக்ரோ இனத்தவரே தகுதியாவர் என்று ஐரோப்பியர் எண்ணினர்.

அமெரிக்காவில் குடியேறிய ஐரோப்பியருக்கு ஆப்ரிக்காவிலி ருந்து ஏற்றிவரப்பட்ட நீக்ரோ வர் விற்கப்பட்டனர். **சார்லஸ்** என்ற ஸ்பெயின் நாட்டு மன்

னன், ஆண்டுதோறும், **ஹட்டி, கியூபா, ஜமைய்க்கா, போர்டோரிகோ** முதலிய குடியேற்ற நாடுகளுக்கு,4000 நீக்ரோவஸ்க் கொடுக்கும்படியான ஒரு வாணிப உரிமையைவழங்கினன். இதுதான் ஆப்ரிக்கா—அமெரிக்க அடிமை வாணிபத்தின் ஆரம்பமாகும்.

இந்த வாணிபம் பல கூட்டுக் குழு (கம்பெனி)க்களால் நடத்தப்பெற்று வந்தது. ஆங்கிலேயரும் இதில் தலையிடாமல் இல்லை. **ஜான் ஹாக்கின்ஸ்** என்ற ஆங்கிலேயப் பெருமகனர் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டு **ஸ்பானிஷ்** குடியேற்ற நாடுகளுக்கு அடிமைகள் வழங்கும் பொறுப்பை ஏற்று மிகுந்த ஊதியம் பெற்றார். கி. பி. 1620–ல் ஹாலந்து கப்பலொன்று ஆப்ரிக்காவின் **கினியா** கடற்கரையிலிருந்து நீக்ரோவரை ஏற்றிக் கொண்டு அமெரிக்கா சென்று, அங்கு ஆங்கிலேயருக்குச் சொந்தமாக இருந்த வர்ஜீனியா பகுதியிலுள்ள ஜேம்ஸ்டவுனில் புகையிலைத் தோட்டங்களுக்காக நீக்ரோவரை விற்றது. இதுதான் ஆங்கில—அமெரிக்காவின் அடிமைமுறையின் ஆரம்பமாகும். 1790–ல் வர்ஜீனியா மாநிலத்தில் 2,00,000 நீக்ரோவருக்குமேல் இருந்தனர். ஆண்டுக்கு 4,800 பேர் வீதம் 1713 முதல் 30 ஆண்டுகளுக்கு ஸ்பானிஷ் குடியேற்ற நாடுகளுக்கு அடிமைகளை வழங்கும் உரிமையையும் ஆங்கிலேயக் கூட்டுக் குழுவொன்று பெற்றது.

ஆப்ரிக்காவிலிருந்து வெளியேற்றப்படும் நீக்ரோவர் தொகை அதிகரித்துக்கொண்டே வந்தது. 1680—1700 ஆண்டுகளுக்கு இடையில் 3,00,000 பேர் ஆப்ரிக்காவிலிருந்து கொண்டுவரப்பட்டனர். 1700—1786–ம் ஆண்டுவரை, **ஜமைக்கா** பகுதிக்கு மட்டும் 6,10,000 பேர் ஏற்றுமதி செய்யப்பட்டனர். ஆங்கிலேயப் பகுதிகளில் மட்டும் 1680—1786–ம் ஆண்டுவரை இறக்குமதி செய்யப்பட்ட நீக்ரோவர் தொகை 21,30,000 பேர்களாகும்.

இங்கிலாந்தில் **லிவர்பூல், லண்டன், பிரிஸ்டல், லங்காஸ்டர்** ஆகிய துறைமுகங்களிலிருந்து புறப்பட்ட அடிமை வாணிபக் கப்பல்கள் 192 ஆகும். இங்கிலாந்து மட்டுமல்லாமல் பல ஐரோப்பிய நாடுகளும் இந்த வாணிபத்தைப் போற்றி வளர்த்திருக்கிறது. 1790–ல் ஆப்ரிக்காவிலிருந்து வெளியேறிய நீக்ரோவர் மொத்தம் 74,000 பேரில், ஆங்கிலேயர் கொண்ட பங்கு 38,000, பிரான்சு 20,000, போர்த்துக்கல் 10,000, ஹாலந்து 4,000, டென்மார்க்கு 2,000, ஆகும்.

இப்படி லட்சக்கணக்கில் ஏற்றுமதியாகும் இந்த விற்பனைப் பொருள்கள் எப்படிக் கிடைத்தன என்று எண்ணத்தோன்றும்.

துப்பாக்கி, பீரங்கி முதலிய ஆயுதங்களைக் கொண்ட கப்பல்களில் வந்திறங்கிய ஐரோப்பியர் முன் ஆப்ரிக்காவில் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்த நீக்ரோவர் எதிர்த்து நிற்கும் திறன் பெறவில்லை. மேலும சில நீக்ரோத் தலைவர்களே ஆட்களைப் பிடித்துத்தரும் வேலைக்கு வந்தனர். இதற்குப் பதிலாக அவர்கள் ஐரோப்பிய பொருள்களைப் பெற்றனர். இவர்கள் பலவிதங்களாக நீக்ரோ மக்களைப் பிடித்தனர். அவைகளில் சில மிகக் கொடுமையாகவே இருந்தன. ஆள் பிடிக்கும் விதத்தில் முக்கியமானது ஊரை இரவில் கொளுத்துவதாகும். நெருப்பினின்று தப்பி வெளியேறும் மக்களைப் பிடித்துச் சென்றுவிடுவர். இதனால் காணுதவரைத் தீயில் இறந்துபட்டதாக எண்ணிவிடுவர் ஏமாந்த நீக்ரோ மக்கள். இதைப் போல் பலவித கொடுமைகள் புரிந்தே அடிமை வாணிபம் சிறப்பாக நடத்தப்பட்டது ஐரோப்பிய மக்களால்.

அடிமை வாணிபத்தின் கொடுமையை உணர்ந்து அதைக் கண்டிக்கத் தலைப்பட்டனர் நல்லறிவாளர்கள் சிலர். இங்கிலாந்தில் வாழ்ந்த, பாக்ஸ்டர், ரிச்சர்ட் ஸ்டீல், சதர்ன், போப், கூப்பர், டயர், ஜான் வெஸ்லி, ஒயிட் பில்ட், ஆதாம் ஸ்மித், மில்லர், ராபர்ட்சன், டாக்டர் ஜான்சன் ஆகியோர் அடிமை வாணிபத்தைக் கண்டித்துக் கருத்துக்கள் வழங்கினர்.

1776—ல் இங்கிலாந்து மக்கள் சபையில் டேவிட் ஹார்ட்லி என்பவர், "மனித உரிமைக்கும் கடவுள் கொள்கைக்கும் புறம்பான" அடிமை வாணிபத்தை ஒழிக்க வேண்டும் என்று வாதாடினார்; ஆனல் வெற்றி கிட்டவில்லை. 1783—ல் ஜார்ஜ் பாக்ஸ் என்பவரின் தலைமையில் எதிர்ப்பாளர்கள் ஒன்றுகூடி மக்களுக்கு அடிமை வாணிபத்தின் தீமையை விளக்கினர். வில்பர் போர்ஸ் என்ற பாராளுமன்ற உறுப்பினர் அடிமை வாணிப முறையை ஒழிக்கப் பலவாறு முயற்சிகள் எடுத்தார். ஆனல் பாராளுமன்றத்தில் தோல்வியே ஏற்பட்டுவந்தது. கடைசியாக 1806—ல் அதிகாரத்தில் அமர்ந்த கிரென்வில் பிரபுவும் பாக்சும் அடிமை வாணிப ஒழிப்பை ஆதரித்ததால், மக்கள் சபையும், பிரபுக்கள் சபையும் ஆதரவு தந்தன. 1807—ல் அடிமை வாணிப ஒழிப்புச் சட்டம் அரசரின் கையெழுத்தையும் பெற்றது. இதன்படி 1807-ம் ஆண்டு மே மாதம் 1—ம் தேதி முதல் எந்தக் கப்பலும் அடிமைகளை ஏற்றிவரும் விதத்தில் ஆங்கிலேய ஆட்சிக்குட்பட்ட இடத்தில் மிதக்கக்கூடாது என்று ஏற்பட்டது. எந்தக் குடியேற்ற நாடுகளிலும் புதிதாக அடிமைகள் இறங்கக்கூடாது என்றும் ஏற்பட்டது. இவ்விதமாக இங்கிலாந்து அடிமை வாணிப முறையை ஒழிக்க முன்வந்தது.

அடிமை வாணிப முறையை முதலாவதாக ஒழித்த நாடு டென்மார்க்தான். 1802 முதல் டென்மார்க்குக்குச் சொந்தமான நாடுகளில் அடிமை வாணிபம் நடைபெறக்கூடாது என்ற மன்னரின் உத்தரவு பிறந்தது.

இதன் பின் எல்லா நாடுகளிலுமே அடிமை வாணிப ஒழிப்புச் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1808 முதல் அமெரிக்காவிலும், 1813 முதல் ஸ்வீடனிலும், 1814 முதல் ஹாலந்திலும், 1820 முதல் ஸ்பெயினிலும், 1825-ல் பிரான்சிலும், அடிமை வாணிபம் ஒழிக்கப்பட வேண்டியதென ஒப்புக்கொள்ளப்பட்டு அதற்கான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

என்றாலும் சட்டத்தை மீறி வாணிபத்தை நடத்த முயற்சித்தனர். இதற்காக இங்கிலாந்து 1833-ல் பிரான்சுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டு அதன்படி இரு நாடுகளும் சில பகுதிகளிலே வேவுபார்த்து அடிமை வாணிபக் கப்பல்களைப் பிடிக்கும் உரிமையைப் பெற்றன. 1842-ல் ஏற்பட்ட ஆங்கிலோ-அமெரிக்க உடன்பாட்டின்படி இரு நாடுகளும் சேர்ந்து ஆப்ரிக்கக் கடற்கரை யோரங்களில் நடைபெறும் அடிமை வாணிப முயற்சியைத் தவிர்க்கும் பணியினை ஏற்றுக்கொண்டன.

இவ்வாறு பலநாடுகளுக்கிடையே நடைபெற்று வந்த அடிமை வாணிபம் ஒழிந்துவிட்டாலும் வட அமெரிக்காவிலும் தென் அமெரிக்காவிலும் உள்நாட்டு வாணிபம் மறைமுகமாக நடைபெற்றுக் கொண்டுதான் இருந்தது. அடிமை முறையை அறவே நீக்கினாலன்றி இக்குறையைத் தீர்க்க இயலாது என்பது தெரிந்தது. ஆனால் அமெரிக்க நாடுகள் அடிமை முறையை ஒழிக்க முன்வரவில்லை.

சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் எல்லா நாடுகளும் அடிமை வாணிபத்தை ஒழிக்க முன்வந்தது அவரவர்களது மனிதாபிமானத்தைக்காட்டி நிற்கும் ஒரு செயலாகக் கருதமுடியாது. ஏனெனில் அடிமை வாணிபம் ஒழிக்கப்படாவிட்டால் அடிமைகளாகக் குடியேறி வந்த நீக்ரோ மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்து ஐரோப்பியரின் தொகையை மிஞ்சிவிடும் என்ற எண்ணம் பல நாடுகளுக்குத் தோன்றியது. அடிமைகள் அதிகரித்தால், உரிமைகோரிப் புரட்சி செய்வார்களோ என்று அஞ்சினர் அவர்களை ஆட்டிப் படைத்த ஐரோப்பியர். இதற்கு எடுத்துக்காட்டாக ஹட்டி என்ற பிரெஞ்சுக்காரருக்குச் சொந்தமான தீவில் அதிகமாகக் குடியேறி இருந்த நீக்ரோவர் பிரான்சு தேசத்தில் புரட்சியெழுந்தபோது இங்கேயும் கிளர்ச்சிகள் செய்ததன் முடிவாக, ஹட்டி ஒரு சுதந்திரம் பெற்ற நாடாக மாறியது. பிரெஞ்சு சர்க்காரும் வேறுவழி

யறியாது அதன் சுதந்திரத்தை ஒப்புக்கொள்ள நேரிட்டது.

ஆகவே அடிமை வாணிபம் ஒழிக்கப்பட்டது இன்றியமை. யாத ஒரு சூழ்நிலையால் ஏற்பட்டதேயாகும். அப்பொழுது அது ஒழிக்கப்படாமல் இருந்திருந்தால் ஹட்டி மக்கள் கிளப்பிய புரட்சித்தீ அமெரிக்கா எங்கணும்பரவியிருக்கும். இன்றுள்ள உலக நாடுகளின் தொடர்பும் வேறுவிதமாக அமைந்திருக்கும். போருக்குப்பின் பணிவதை விடப் போருக்குமுன் தோழமை கொள்வதே மேல் என்னும்படி தான் ஐரோப்பிய நாடுகள் அடிமை வாணிப ஒழிப்புக்கு இசைய முன்வந்தன.

கி. பி. 15-ம் நூற்றுண்டிலிருந்து 19-ம் நூற்றுண்டுவரை, நான்கு நூற்றுண்டுகளில் ஐரோப்பியர் நடத்திய வெறிச் செயல் ஒழிந்து விட்டாலும், இன்றுவரை மனிதனை மனிதன் அன்புகொண்டு போற்றிடும் அளவுக்கு உலக நாடுகளின் தொடர்பு அமையவில்லை. அது அமையும்போதுதான் அடிமை வாணிபம் முற்றிலும் அகன்று விட்டதாகப் பொருள்கொள்ள முடியும்.

—"மன்றம்"

★★★


# "ஆரம்பக்கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8
ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0
பிராவிடண்ட் பண்ட்கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0
பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0
வருடாந்திர பிராவிடண்ட் பண்ட் (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்) (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# அன்றோர் நாள் உருவாகிய அரும்பெரும் சக்தி !

★

முதன் முறையாக அணு உலை உருவாகி டிசம்பர் 2–ந் தேதியோடு சரியாக 12 ஆண்டு ஆகிறது. அணுவை உடைத்துத் தட்டுப்பாடு இல்லாமல் வெப்பம் உண்டாக்கும் முதலாவது அணு உலை அன்றுதான் தோன்றிற்று. உலகமெங்கும் விஞ்ஞானிகள் பலர், 1942–ம் ஆண்டு டிசம்பர் 2–ந் தேதியை, 'அணு யுகம் பிறந்த நாள்' எனக் கருதுகின்றனர்.

அந்த முதலாவது அணு உலையை ஆக்கியவர் காலஞ்சென்ற டாக்டர் என்ரிக்கோ பெர்மி என்னும் பௌதிக விஞ்ஞானி. அமெரிக்காவில் சிக்காகோ நகரத்தில் அணுயுகத்தைத் தோற்று வித்த அவர் இத்தாலியில் பிறந்தவர். உலகம் அவரை 'அணு யுகச் சிற்பி' என அழைப்பதுண்டு.

நினைத்தவாறு அணு உலையைக் கட்டுப்படுத்தி அதிலிருந்து வெப்பம் பெறும் முறையை முதன் முதலாகத் தோற்றுவித்த புகழுடைய பெர்மிக்கு அமெரிக்க அணுசக்திக் கமிஷன் (நவம்பர் 16–ல்) விசேஷ பரிசு வழங்கியது.

"அணுசக்தியை வென்றுவிட்டோம்; அதனை அழிவு செய் வதற்கு அல்லாமல் மக்கள் இனத்துக்குச் செழிப்பு மல்கும் ஒரு புதுயுகம் தோற்றுவிப்பதற்காக உபயோகிக்கலாம் என நான் உண்மையாகவே நம்புகிறேன்", என்பது, டாக்டர் பெர்மி தமது மரணத்துக்கு முன்பு கூறிய மொழியாகும்.

இந்தப் பன்னிரண்டு ஆண்டுக் காலத்திற்குள், அணுசக்தி, மாபெரும் அழிவு சக்தியாக ஆனதையும், அமைதிக்குரிய துறை களில் பெரும் பெரும் நன்மை செய்யக்கூடியதாக வளருவதை யும் உலகம் கண்டுவிட்டது. அணுவை மக்களுக்கு அடிமை செய்யும் அமைதியான மிகச் சிறந்த ஊழியனாக ஆக்க அமெரிக் காவும், பிரிட்டனும், மற்றுமுள்ள சுதந்தர நாடுகளும், இயன்ற முயற்சிகளெல்லாம் செய்கின்றன. சர்வதேச அணுசக்தி ஸ்தா பனத்துக்கு 'தோரியம்' வழங்குவதாக இந்தியாவும் முன்வந் துள்ளது.

அணு சக்தியை "மக்கள் இனத்துக்குச் செழிப்பு மல்கும் ஒரு புதிய யுகம் தோற்றுவிப்பதற்காக உபயோகிக்கலாம்" என்று டாக்டர் பெர்மி உளமார நம்பிய நம்பிக்கையை, தமது நம்பிக் கையாகக் கொள்ளாத பொறுப்புள்ள தலைவர் சுதந்திர உலகில் இன்று எங்கும் இல்லை.

அணு 'ரியாக்டர்' என்றாலும், 'அணு உலை' என்றாலும் ஒன்றே. யுரேனியம் அல்லது அணுச் சிதைவுள்ள வேறு ஒரு பொருள் அதில் இருக்கும். யுரேனிய அணு ஒன்றை உடைத்தால், 'நியூட்ரான்' எனப்படும் நுண்ணிய துகள்கள் புறப்படும். நியூட்ரானால் தாக்கப்பட்ட மற்ற அணுக்களும் உடைபட்டு மேலும் பல நியூட்ரான்கள் உண்டாகும். இவ்வாறு அணு உடைபட்டு உடைபட்டுத் தாங்க முடியாத வெப்பம் உண்டாகிறது. வேண்டும்பொழுது இவ்வாறு வெப்பம் உண்டு பண்ணவும், வேண்டாத போது அவ்வுற்பத்தியை நிறுத்தி வைக்கவும் தகுந்தவாறு டாக்டர் பெர்மியும், அவருடன் உழைத்தவர்களும், 'அணு உலை'யை ஆக்கியிருக்கிறார்கள். அணு சக்தியை, அமைதிக் காலத்து ஆக்க வேலைகளில் செலுத்துவதற்கு 'அணு உலை' கள் மிகவும் முக்கியமான சாதனங்களாகும்.

'அணு உலை'களில் பாஸ்பரஸ், கோபால்ட் முதலிய சாதாரண இரசாயன மூலப் பொருள்களைப் புகுத்தி, அவற்றையும் அணுச் சிதைவுள்ள பொருள்களாக மாற்றலாம். இவற்றை "ரேடியோ ஆக்டிவ் ஐஸடோப்புகள்" அல்லது "ரேடியோ ஐஸடோப்புகள்" என்பார்கள். அவற்றை, 'அணுக் கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகள்' என்று கூறலாம். ஆக்கவேலைகளில் அணு சக்தியைச் செலுத்துவதற்கு இந்தக் கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகள் அருமையான கருவிகளாக வாய்த்துள்ளன.

விஞ்ஞானத்துக்கு "மைக்கிராஸ் கோப்" எவ்வளவு இன்றியமையாத கருவியோ, அவ்வளவு இன்றியமையாததாகியுள்ளது கதிரியக்கமுள்ள ஐஸடோப்பும். வைத்தியம், விவசாயம், தொழில் முதலிய துறைகளிலெல்லாம் கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகளால் பெரிதும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

**வைத்தியத்தில் சில வகைப் புற்று நோய்களையும், மற்றும் பல பிணிகளையும் அறிந்து குணமாக்குவதற்குக்கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகள் விஞ்ஞானிகளுக்கு மிகவும் உதவியுள்ளன.**

**பயிர் வகைகளைச் சிறந்தவையாக்கி விளைவைப் பெருக்க அவை உதவி செய்கின்றன. தொழில் துறையில் உற்பத்தியின் செலவு குறையவும், தரம் உயரவும் அவை செம்மையாகப் பயன்படுகின்றன. பல துறைகளிலும் விஞ்ஞான ஆராய்ச்சி முன்னேறுவதற்கு அவை பெருந் துணையாகியுள்ளன.**

அணுவிலிருந்து மின்சாரம் எடுப்பதற்கும் வேலை நடக்கிறது. அமெரிக்காவிலும், பிரிட்டனிலும் அதற்காகப் பெரிய பெரிய அணு உலைகள் செய்கிறார்கள். இன்னும் சில ஆண்டுகளில் வேறு பல நாடுகளிலும் அத்தகைய

அணு உலைகள் கட்டப்படும் எனத் தெரிகிறது.

இந்த 'அணு உலை'களில், அணுவை உடைத்து வெப்பம் பெறுகிறார்கள். இந்த வெப்பத்தால் நீரை ஆவியாக்கி, நீராவியால் 'டர்பைன்' இயந்திரத்தை ஓட்டுகிறார்கள். டர்பைன் இயந்திரம், மின்சார உற்பத்தி இயந்திரத்தை இயக்க, மின்சாரம் உற்பத்தியாகிறது. இதனை அணு மின்சாரத் தொழிற்சாலை எனலாம். இதற்கும், சாதாரண மின்சார உற்பத்திச் சாலைக்கும் உள்ள வித்தியாசம் ஒன்றுதான்; மற்ற மின்சார உற்பத்திச் சாலைகளில், நிலக்கரியோ, எண்ணையோ இருக்கும்; இதில் யுரேனியம் இருக்கும்.

சர்வதேச அணுசக்தி நிறுவனம் இப்பொழுது உருவாகிக் கொண்டிருக்கிறது. அதற்கு அமெரிக்காவும், பிரிட்டனும் யுரேனியம் கொடுத்திருக்கின்றன. இது அணு உலைகள் செய்வதற்கு உதவியாகும் எனத் தெரிகிறது.

இவ்வாறு செய்யப்படும் சிறிய அணு உலைகள், கதிரியக்கமுள்ள ஐஸடோப்புகளை உற்பத்தி செய்யப் பயன்படும்; அணுவைப் பற்றியும் அதனை எவ்வெவ்வாறு ஆக்கமான துறைகளில் பயன்படுத்தலாம் என்பது பற்றியும் அறிவதற்கும், அவை பெரிதும் பயன்படும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

இன்றைய அணு உலைகள் தோன்றுவதற்கு வழிகாட்டியாக இருந்த முதலாவது அணு உலை சரித்திரப் புகழ் வாய்ந்ததெனினும் அதன் அமைப்பு எளிமையானதே. அதன் அமைப்பை மேற்பார்த்தவரும் அதனை ஆக்குவதற்குப் பொறுப்பாயிருந்தவரும் டாக்டர் பெர்மியா வார்.

முதலில் ஒரு மரச்சட்டத்தை அடியில் வைத்தார்கள். அதன் மேல் அடுக்கடுக்காகப் பென்சில் கரி அல்லது கிராபைட்டு என்பதை வைத்தார்கள். இந்த கிராபைட்டு அடுக்குகளில் ஒன்று விட்டு ஒன்றின் மூலைகளில் யுரேனியம் அல்லது யுரேனியம் ஆக்ஸைடு கட்டி கட்டியாக வைக்கப்பட்டிருந்தது. கிராபைட்டு அடுக்குகளில் துவாரங்கள் இருந்தன; அவற்றின் வழியே காட்மியம் கம்பிகள் செருகப்பட்டிருந்தன. நியூட்ரானைக் கவர்ந்து கொள்ளக் கூடியது காட்மியம்; எனவே தட்டுத் தடங்கல் இல்லாமல் அணு உலை உஷ்ணம் கொடுக்கத் தொடங்கும் நிலை அடைந்ததும் திடீரென அது வேலை செய்யத் தொடங்கி விடாதபடி காப்பதற்கு இந்தக் காட்மியக் கம்பிகள் பயன்பட்டன.

இந்த அணு உலை அடுக்கினுள், நியூட்ரான் உற்பத்தி நிகழ்வதைக் கண்டு பிடிப்பதற்குரிய கருவிகளும் அருகில் பொருத்தப்பட்டன. கிராபைட்டு அடுக்குகளை ஒவ்வொன்றாக அடுக்க அடுக்க, காட்மியக் கம்பிகள்

இடைக்கிடையே கவனமாக வெளியே இழுக்கப்பட்டன. இவற்றை முழுவதும் இழுத்து விட்டால், உள்ளே நடக்கும் நியூட்ரான் உற்பத்தியின் வேகம் அனைத்தையும் கருவிகளில் கண்டு விடலாம்.

நியூட்ரான் உற்பத்தியால் மேலும் மேலும் அணுக்கள் உடைபட்டு உஷ்ணம் இடைவிடாமல் உண்டாகவேண்டும் என்பதே ஆராய்ச்சியின் நோக்கம். அதற்கு அணு உலை எந்த அளவு பெரிதாக இருக்கவேண்டும் என்று கண்டு பிடிக்கவே டாக்டர் பெர்மி இப்பரிசோதனையை நடத்தினார். அவர் நினைத்ததற்கு முன்பே, அணு உலை அடுக்கு தகுந்த அளவுக்கு விரைவில் வளர்ந்தது.

நியூட்ரான் உற்பத்தி மிக வேகமாக நடந்து வருகிறது என்று டிசம்பர் 1-ந் தேதி தெரியவந்தது. அன்று இரவு டாக்டர் பெர்மியும் அவருடைய துணைவர்களும் அணு உலையிலிருந்து காட்மியக் கம்பிகளை எடுத்துவிட்டால், அணு உலை தானாக வேலை செய்யத் தொடங்கி விடும் என்று கண்டனர்.

1942 டிசம்பர் 2-ம் நாள் விடிந்தது; காலை 9-45 மணி; காட்மியக் கம்பிகள் சிலவற்றை வெளியே இழுத்து விடும்படி டாக்டர் பெர்மி சொன்னார். அருகிலிருந்தவர் எல்லோரும் நியூட்ரான் உற்பத்தியைக் காணும் கருவிகளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இக்கருவிகளின் முகப்புகடிகாரம் போலத் தோன்றும்; கடிகார முள் போல அதில் ஒரு முள் உண்டு; நியூட்ரான் உற்பத்தி வேகத்துக்குத் தக்கபடி அது "கிளிக் கிளிக்" என்று அசையும். இன்னொரு கருவியும் பக்கத்தில் இருந்தது; அதில் ஒரு பேனா உண்டு; அது அணு அடுக்கினுள்ளேயுள்ள நியூட்ரான் உற்பத்தி வேகத்தை ஒரு காகிதத்தில் கோடிட்டுக் காட்டுவதாகும்; கோடு உயரப் போனால் அதிக நியூட்ரான்கள் ஒரே வேகமாய் உற்பத்தியாகின்றன என்று பொருள்.

நியூட்ரான் உற்பத்தி கட்டுக்கடங்காமல் போய் விடாதபடி காக்க, முக்கியமான காட்மியக் கம்பி ஒன்று செருகப்பட்டிருந்தது. அதனை வெளியே எடுத்து விடும்படி டாக்டர் பெர்மி 10 மணி ஆனதும் சொன்னார். ஸின் என்பவர் அவ்வாறே செய்தார். இன்னொரு கம்பிக்கு அருகே ஜார்ஜ் வெய்ல் என்பவர் நின்றார். அக்கம்பி, அணு உலை அடுக்கினுள்ளே எத்தனை அடி எத்தனை அங்குலம் இருக்கிறது என்று அறியுமாறு வரையிடப்பட்டிருந்தது.

நியூட்ரான் உற்பத்தி வேகத்தைக் காட்டும் கருவிகளின் 'கிளிக் கிளிக்' என்ற சத்தம் அதிகமாயிற்று; காகிதத்தில் வரையும் கோடும் உயர்ந்தது; ஆனால், சத்தம் ஒன்றுபோல் இல்லை; விரைவில், சத்தம் குறைந்து விட்டது; கோடும்

படுக்கைக் கோடாகிவிட்டது. அணு உலை இன்னும் தானே இயங்கக் கூடியதாக வளரவில்லை.

ஜார்ஜ் வெய்ல் வைத்திருந்த காட்மியக் கம்பி அதன்பின் பன்முறை சிறிது சிறிதாக உயர்த்தப்பட்டது. ஒவ்வொரு முறையும் நியூட்ரான் உற்பத்தி வேகம் உயர்ந்தது. ஆனால், விரைவில் அது தணிந்துவிட்டது. நண்பகல் ஆனதும் டாக்டர் பெர்மி, 'பசிக்கிறது; சாப்பிடப் போகலாம்' எனத் திடீரெனக் கூறினார்.

கூட வேலை செய்பவர்களுக்கு அலுப்புத் தட்டக்கூடாது என்பதை அவர் உணர்ந்தார் போலும். சாப்பாட்டு வேளையில் அவர் அதிகம் பேசவில்லை. எப்போதுமே அதிகம் பேசாதவர் அவர். அன்று அவர் அதிக மௌனமாக இருந்தார்.

இரண்டு மணிக்கு மீண்டும் ஆராய்ச்சிக் களத்தை நோக்கி அவர்கள் நடந்தார்கள். இருபது நிமிடம் கழித்து, 'உம், சரி,' என்றார் டாக்டர் பெர்மி; குறித்த அளவு ஜார்ஜ் வெய்ல் காட்மியக் கம்பியை வெளியே இழுத்தார். அருகில் நின்றவர் எல்லோரும் ஆவலாய்க் கவனிப்பதும், கருவிகளிலிருந்து நியூட்ரான் உற்பத்தி வேகத்தை டாக்டர் பெர்மி கணிப்பது வரைக் காத்திருப்பதுமாக இருந்தார்கள்.

"இப்பொழுது நடந்து விடும்; இனிமேல் அணு உலை தானே இயங்கும்; கோடு உயர்ந்து கொண்டே போகும்; இறங்காது" என்றார், டாக்டர் பெர்மி, அருகிலிருந்த டாக்டர் ஆர்தர் காம்டனிடம்.

டாக்டர் பெர்மி, நியூட்ரான் உற்பத்தி வேகத்தைக் கணக்கிட்டார்; ஒன்றும் பேசாமல் வேகமாக மாறி மாறிக் கணக்குகள் போட்டார்

அவருக்குப் பின்புறம் நின்றவர்கள் உன்னிப் பார்த்தார்கள். புதுயுகம் பிறக்கப் போவதை ஒரு விநாடியும் தப்பாமல் காண வேண்டுமென்று ஒரே ஆர்வம், அவர்களுக்கு! நியூட்ரான் வேகம் காட்டும் கருவிகள் இரையத் தொடங்கின. அமைதியாய் டாக்டர் பெர்மி கணக்குப் போட்டுக்கொண்டிருந்தார்.

சரியாக 3–25 மணிக்கு, டாக்டர் பெர்மி, "அணு உலை, தானே இயங்குகிறது" என்றார்.

1942 டிசம்பர் 2, பிற்பகல் 3–25 மணியை, அனேக விஞ்ஞானிகள், 'அணு யுகத்தின் தொடக்கம்,' எனக் கருதுகிறார்கள்.

இவ்வாறு அணு உலை 28 நிமிட நேரம் வேலை செய்யவிடப் பட்டது.

பிறகு காட்மியக் கம்பிகள் உள்ளே செருகப்பட்டன.

—"நம் நாடு"

# போதிப்பதையே பின்பற்று

(D.E. மாசிலாமணி, ஆசிரியர், ஆசிரியப்பயிற்சி மன்றம், விருதம்பட்டு.)

ஒரு நாள் சாக்ரடீஸ் பெரியார் சாரணர் விடுதியை எதிர்பாராத விதமாய்ப் பார்வையிட வந்தார். "ஆஹா! எவ்வளவு சிறந்த சாரணர் சங்க விடுதி இது! சுவர்களிலெல்லாம் சிறந்த பொருத்தமான பொன் மொழிகள் எழுதப்பட்டுள்ளன; சுத்தம், சிக்கனம், கழிவிடம், இவற்றைப்பற்றி வரிசைக் கிரமமாக எழுதப்பட்டுள்ளன. இதைத் தான் நான் விரும்புகிறேன். நிச்சயமாக உங்கள் கிராமம் உங்கள் சேவைகளால் முன்னேற்றம் அடைந்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்."

**சாரணப் படைத்தலைவர்** :—நீங்கள் எங்கள் அற்ப சேவையைப் பாராட்டுவது எங்கள் பாக்கியம் என்று எண்ணுகிறேன்; ஆனால் எங்கள் கிராமம் நீண்டகாலமாகக் குறிப்பிடத்தக்கமுறையில் முன்னேற்ற மடைய முடியாமலே இருக்கின்றது.

**சாக்ரடிஸ்** :—நிஜமாகவா? ஆச்சரியமாக இருக்கின்றதே? ஆனால், உங்கள் உபதேசத்தை இந்தக் கிராமத்தினர் பின்பற்றினால் நிச்சயமாக அவர்கள் முன்னேறி யிருப்பார்கள்.

**சாரணத் தலைவர்** :—நாங்கள் சொல்லுவதை அவர்கள் ஏற்றுக் கொள்ளுவதே இல்லை. நாங்கள் கூறுவதை ஒரு காதில் கேட்டு மற்றொரு காதில் விட்டுவிடுகிறார்கள்.

**சாக்ரடிஸ்** :—அது சரி; இப்போது உங்கள் சாரணர் படை விசேஷ நிகழ்ச்சி நிரலை நான் கேட்க விரும்புகிறேன்.

[சாக்ரடிஸ், சாரணர் குழுவினர் செயலைக்காண விரும்பியது அனைவருக்கும் மகிழ்ச்சி யூட்டியது. இரு சாரணர் இனிய குரலில் சிறந்த பொருள்கொண்ட பாடல்களைப் பாடினார்கள்.]

**சாக்ரடிஸ்** :—சபாஷ்! இரண்டும் நேர்த்தியான பாடல்கள். மிக அழகாகப் பாடப்பட்டன. இப்பாடல்களின் கருத்து என்ன?

**சாரணத் தலைவர்** :—முதல் பாடல் சிக்கனத்தைப்பற்றியது; அது ஒன்பதாம் சாரண விதி. அடுத்த பாடல் பத்தாம் விதியை ஒட்டிய உடல் சுத்தத்தைப் பற்றிப் பாடப்பட்டது.

**சாக்ரடிஸ்** :—நீங்கள் சாரண விதிகளை நன்கு அறிந்திருப்பது பாராட்டுக் குரியதே! ஆனால் ஒரு விஷயத்தைத்தான் நான் அறிந்துகொள்ள முடியவில்லை!

**சாரணர்கள் :**—(சாக்ரடிஸ் புரிந்துகொள்ளாத விஷயம் தங்களுக்கு எளிது என்ற மனப்பான்மையுடன்) அப்படி நீங்கள் அறிந்து கொள்ள முடியாதது எது?

**சாக்ரடிஸ் :**—முதலில் பாடிய சாரணன், காதில் பொன் கடுக்கன் அணிந்து கொண்டிருந்தான். இரண்டாவது பாடிய சாரணனுடைய கைவிரல் நகங்களில் அழுக்குப் படிந்திருப்பதைக் கவனித்தேன். சிக்கனம், உடல்சுத்தம், இதைப்பற்றி இவர்கள் பாடுவது வேடிக்கையாக இல்லையா?

**சாரணத் தலைவர் :**—நான் அந்த மாணவனுடைய கைநகங்களைக் கவனிக்கவில்லை; ஆனால் இந்தப்பக்கத்து வழக்கத்தின்படி முதல் மாணவன் பொன் கடுக்கன் அணிந்துகொண்டு இருக்கிறான்.

**சாக்ரடிஸ் :**—நான் ஒரு சமயம் நன்றாகக் கள் குடித்துவிட்டு வந்து, கள் குடிக்காதீர்கள் என்று போதித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

**சாரணத் தலைவர் :**—நீர் போய் முதலில் கள் குடிப்பதை ஒழித்துவிட்டு எங்களுக்குப் போதிக்க வாரும் என்று சொல்லுவோம்.

**சாக்ரடிஸ்:**--அதைத்தான் நானும் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். நீங்களும் உபதேசம் செய்வதையே பின்பற்ற முயற்சித்தால், நீங்கள் பாடும், சிக்கனம், சுத்தத்தைப் பற்றிய பாடல்கள் நிச்சயமாகக் கிராமமக்களைப் பாதித்து சீர்திருத்தக்கூடும் அல்லவா?

**சாரணத் தலைவர் :**—ஆம் ஐயா! அது உண்மை. நாங்கள் அதைப் பற்றி யோசித்ததே இல்லை.

**சாக்ரடிஸ்:**-இன்று முதல், நீங்கள் ஒழுங்காகப் பின்பற்றாத விதிகளைக் கிராமத்தாருக்கு உபதேசிப்பதில்லை என்ற சட்டத்தை வைத்துக் கொள்ளுங்கள். கிராமவாசிகள் அறிவிலிகள் அல்லர். நீங்கள் போதிப்பதைப் பின்பற்றினால் அவர்களும் நிச்சயமாக உங்கள் உபதேசத்தைப் பின்பற்றுவார்கள். நீங்கள் போதிக்கும் விதிகளை நீங்களே கவனியாமல் அசட்டை செய்தால் உங்கள் முன்னேற்றப் பாடல்களைத் தெருவில் கத்தும் கழுதையின் பாடலாகவே அவர்கள் கருதக்கூடும். அதற்காக அவர்களைக் குற்றம் சுமத்துவதும் கூடாது.

**சாரணத் தலைவர் :**—சாக்ரடிஸ் பெரியாரே; உமக்கு மெத்த வந்தனம். உமது ஆலோசனைப்படி நாங்கள் இன்று முதல் நடந்து கொள்ளுவோம்.

**சாக்ரடிஸ் :**—மேலும் இதைக் கவனியுங்கள்; குப்பை கூடம், கழிவிடம் (Latrine) இவற்றைப்பற்றிய பெரிய விளம்பரங்கள்

அங்குக் காணப்படுகின்றன. ஆனால் உங்கள் பாடசாலையிலோ குப்பை போடுவதற்குக் குழிகள் இல்லை. அவை அனைத்தையும் பாடசாலைச் சுவருக்கு அப்பால் கொட்டிவிடுகிறீர்கள். அதனால் சிறிது தூரம் வரும்போதே நாற்றம் மூக்கைத் துளைத்துப் பாடசாலையின் இருப்பிடத்தை நினைப்பூட்டுகிறது. நீங்கள் கிராமத்தினருக்குப் போதிக்கும் குழிகழி விடங்கள் பாடசாலையிலேயே பயன்படுத்தப் படவில்லை. ஆனால் கிராமத்தினரைச் சீர்திருத்தப் பார்க்கிறீர்கள், அது எப்படி முடியும்?

**சாரணத் தலைவர் :**—ஐயா! எங்களை மன்னிக்க வேண்டும். எங்கள் அறியாமையைக் குறித்து வருந்துகிறோம்.

**சாக்ரடிஸ் ;**—உங்கள் பாடசாலையில் குழி கழி விடங்களும், குப்பை பள்ளங்களும், உண்டுபண்ணி நீங்கள் அதைப் பயன்படுத்தும் வரை அதைப்பற்றிப் பேசாமல் இருப்பதுடன் இந்த விளம்பரங்களையும் எடுத்துப் போடுங்கள். இனியாயினும் ஆசிரியரும் மாணவரும் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாய் தயவு செய்து நடந்து கொள்ளுங்கள்.

---

## எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்கள்

### வீட்டு வாடகை அலவன்ஸ் அளிக்க முறையீடு

எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று சென்னை ஆசிரியர் சங்கத்தின் சார்பில் தூதுகோஷ்டி ஒன்று கல்வி இலாகா டைரக்டரைப் பேட்டி கண்டு முறையிட்டுக் கொண்டது. முனிசிபல் ஜில்லா போர்டு சர்க்காரால் நிர்வகிக்கப்படும் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுவது போல், எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் வீட்டு வாடகை அலவன்ஸ் கொடுக்கப்பட வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டனர். கெஜட் பதிவில்லா சிப்பந்திகளுக்கு அளிக்கப்படுவது போல் எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கு வைத்ய சிகிச்சை வசதியும் அளிக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்தப் பட்டது.

தூது கோஷ்டியில் கலந்து கொண்டவர்கள் வருமாறு : ரெவ. டி. தம்புஸ்வாமி, எஸ். நடராஜன், கே. குருவில்லா ஜேகப், எல். மரியப் பிரகாசம், டி. வீராசாமி, டி. என். சுந்தரம் கே. எம். கோஷி, ஏ. கே. சீதாராம ஐயர், ராமஸ்வாமி முதலியார், மிஸ். பி. ஹேமாவதி.

# ஆரம்பக் கல்வி சீர்திருத்தம்

## கேள்வித்தாள் தயாரிப்பு முடிந்தது

### சேலம், கோவையில் கமிட்டி சுற்றுப்பிரயாணம் செய்யும்

'ராஜ்யத்தில் ஆரம்பக் கல்வி சீர்திருத்தம் சம்பந்தமாகப் பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட கமிட்டி ஒரு கேள்வித்தாளை அநேகமாகத் தயாரித்துவிட்டது. இந்தக் கேள்வித்தாள் இரண்டொரு தினங்களில் சட்டசபை அங்கத்தினர்களுக்கும், கல்வித் துறையில் பிரபல்யமடைந்துள்ள சில பிரமுகர்களுக்கும் அனுப்பப்படும்' என்று அக் கமிட்டியின் தலைவர் டாக்டர் ஆர். எம். அழகப்ப செட்டியார் கூறியிருக்கிறார்.

சேலம், கோயமுத்தூர் ஆகிய ஜில்லாக்களில் கமிட்டி முதன் முதலாகச் சுற்றுப் பிரயாணம் செய்யும். 1951–ம் ஆண்டு ஜனகணிதி ரிப்போர்ட் பிரகாரம், சேலம் ஜில்லாவில்தான் எழுத்துப் படிப்பு அறிவு மிகவும் குறைவானது, அதாவது எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அந்த ஜில்லாவில் 12 சத விகிதம்தான் என்று கூறப்படுகிறது. மேற்படி கமிட்டி ஜனவரி 5, 6–ந் தேதிகளில் சேலத்துக்கும், 7, 8-ந் தேதிகளில் கோயமுத்தூருக்கும் விஜயம் செய்யும்.

டாக்டர் அழகப்ப செட்டியார் கமிட்டியின் முதற் கூட்டம் டிஸம்பர் 15-ந் தேதியன்று கல்வி இலாகா டைரக்டர் ஆபீஸில் நடைபெற்றது. சென்னை, செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு ஆகிய பிராந்தியங்களுக்கு ரெவரண்டு டி. தம்புசாமியும் (கெல்லட் ஹைஸ்கூல் தலைவர்) திரு கே. சீதாராம ரெட்டியும் (கடலூர்) கமிட்டியின் கூட்டு அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## ஆசிரியர்களின் ஊதிய நிலை

### த. நா. கா. சப் கமிட்டி சிபார்சுகள்

தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியினால் ஏற்படுத்தப்பட்ட கல்வி சப்கமிட்டி, பள்ளிக்கூட ஆசிரியர்களின் சம்பள நிலைபற்றிப் பரிசீலித்துக் கீழ்க்கண்ட சிபார்சுகளைச் செய்துள்ளது.

கீழ்க்கண்டபடி அடிப்படைச் சம்பளம் உடனடியாகக்கொடுக்கப்பட வேண்டுமென்று கமிட்டி சிபார்சு செய்துள்ளது :—

(1) ஹையர் கிரேடு ஆசிரியர்கள் :—ரூ. 50. (2) செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் (கீழ் வகுப்புகளுக்கு போதிக்கத் தேவையான யோக்கியாம்சமுள்ள இதர ஆசிரியர்களும் உள்பட) ரூ. 70.

(3) பி. டி. அல்லது எல். டி. ஆசிரியர்களுக்கும், ஹைஸ்கூல் வகுப்புகளுக்குப் போதிக்கப் போதிய விசேஷயோக்கியதாம்சமுள்ள ஆசிரியர்களுக்கும் ரூ. 100.

ஒவ்வொரு ஆசிரியரும், சம்பளத்தில் ரூபாய்க்கு 2 அணா பிராவிடெண்டு நிதிக்குக் கொடுக்கவேண்டும். சர்க்கார் ரூபாய்க்கு ஒரு அணா செலுத்தவேண்டும்.

சம்பளத்தில் ரூபாய்க்கு ஒரு அணாவை ஆசிரியர்கள் பென்ஷன் நிதிக்குக் கொடுக்கவேண்டும். இந்த நிதியை அரசாங்கம் பராமரித்து சர்வீஸ்கால அளவை அடிப்படையாகக்கொண்டு பென்ஷன் வழங்க வேண்டும். ஸர்வீஸ் காலத்தில் கடைசி 3 வருடங்களில் ஒரு ஆசிரியர் பெற்றுவந்த சராசரி சம்பளத்தில் ரூபாய்க்கு 4 அணா வீதம் பென்ஷன் கொடுக்கப்படவேண்டும். 30 வருஷ சேவை செய்தால் முழு பென்ஷனும் 15 லிருந்து 29 வருடங்கள் வரை சேவை செய்தோருக்கு அதற்குத்தகுந்த விகிதத்தில் பென்ஷனும், கொடுக்க வேண்டும்.

இன்ஷூரன்ஸ் பாலிஸியை ஒவ்வொரு ஆசிரியரும் கட்டாயமாக எடுத்துக்கொள்ளவேண்டும். பிரீமியம் கட்டுவதற்கு பிராவிடெண்டு நிதி சேமிப்பிலிருந்து பணத்தை எடுத்துக்கொள்ளும் தற்போதுள்ள வசதி நீடிக்கவேண்டும்.

ஆசிரியர்களின் தபாலாபீஸ் பிராவிடெண்டு நிதி பணத்துக்கு வட்டி 2 சத விகிதத்திலிருந்து மூன்றரை சத விகிதத்துக்கு உயர்த்தப்பட வேண்டும்.

என். ஜி. ஓக்களுக்குக் கொடுப்பது போல் எல்லா எயிடட் பள்ளிக்கூட ஆசிரியர்களுக்கும் வைத்திய உதவி வசதிகள் கொடுக்கப்பட வேண்டும். ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடப் படிப்பு முழுதும் இலவசமாகவும், கல்லூரிப் படிப்பு பாதி கட்டணத்திலும் அளிக்கப்பட வேண்டும்.

ஆசிரியர்களின் வேலைமுறை சம்பந்தமான பிரச்னைகளையும் கமிட்டி ஆராய்ந்தது. கமிட்டியின் அடுத்த கூட்டம் 1955 ஜனவரியில் நடைபெற்ற பிறகு இறுதி ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படும்.

# ஆரம்பக் கல்வி அறிஞர் குழு

★

## கேள்விப் பட்டியல் வெளியீடு

★

### ஆசிரியர்கட்கு ஒரு வேண்டுகோள்

ஆரம்பக் கல்வித் திட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்வதற்காகவும் அதன் தொடர்பான ஏனைய பிரச்சினைகளை ஆராய்வதற்காகவும் சென்னை அரசாங்கத்தால், டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களைத் தலைவராகவும் திருவாளர்கள் என். டி. சுந்தரவடிவேலு, எஸ். மீனாட்சி சுந்தர முதலியார், வி. எஸ். கோபாலகிருஷ்ண அய்யர், கே. அருணாசலம், எம். அருணாசலம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட அறிஞர் குழு ஒன்று நிறுவப்பட்டிருக்கிறதல்லவா? அந்தக் குழுவினர், இதுபோது, இது சம்பந்தமான கேள்விப் பட்டியல் (Questionnaire) ஒன்றைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ள இந்தக் கேள்வித்தாளைத்,தமிழ்ப்படுத்திக் கீழே தந்திருக்கிறோம்.இந்தக் கேள்வித்தாளின் பிரதி ஒன்றை நமக்கு அனுப்பி, இதனைத் தமிழில் மொழிபெயர்த்து "ஆரம்பக்கல்வி" இதழில் வெளியிட்டால் மிகவும் நலமாயிருக்கும் என்று மேற்படி நிபுணர் குழுவினர் தெரிவித்ததற்கு இணங்க, இந்தத் தமிழ் மொழி பெயர்ப்பு இங்கே வெளியிடப்படுகிறது. அந்தந்தக் கேள்விகளுக்குப் பக்கத்திலேயே, அந்தந்தக் கேள்விகளுக்குரிய நம்முடைய விடைகளையும் சுருக்கமாகத் தந்திருக்கிறோம். ஆரம்ப ஆசிரியர்களும், ஆசிரிய மானேஜர்களும், ஆசிரியர் கழகங்களும், இந்தக் கேள்விப் பட்டியலையும், எங்களுடைய விடைகளையும் கருத்தூன்றிப் படித்து, கேள்விகளுக்கான தங்களுடைய விடைகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதி, **பிப்ரவரி மாதம் முதல் தேதிக்குள்** மேற்படி கமிட்டியினருக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம். விடைகளைத் தாங்கிய தாள்கள், நூற்றுக்கணக்கிலே, அல்ல அல்ல, ஆயிரக் கணக்கிலே, நிபுணர் குழுவின் முன் சென்று குவியவேண்டும். ஆசிரியர் உலகத்தின் கருத்து இன்னது என்பது, நிபுணர் குழுவுக்கு நிச்சயம் தெரிவிக்கப்பட்டாக வேண்டும். ஒவ்வோர் ஆசிரியரும் தனித் தனியாக விடை எழுதியாக வேண்டும் என்பது அவசியமில்லை. பல ஆசிரியர்கள் ஒன்றாகச் சேர்ந்தும் விடை எழுதலாம். அனைவரும் எழுத வேண்டும். உடனே எழுதவேண்டும். தவறாமல் எழுதவேண்டும். ஆசிரியத் தோழர்களே — தாமதம் வேண்டாம். அவசியம் மிகுந்த பணி — எனவே தவறாது செய்திட வேண்டும் ஆசிரியர் உலகம்.

நிபுணர் குழுவினர் வெளியிட்டுள்ள கேள்விப் பட்டியல் இது :-

## சென்னை ராஜ்ய ஆரம்பக் கல்விக் கமிட்டி கேள்விப் பட்டியல்

### முன்னுரை

சென்னை ராஜ்யத்தின் தற்போதைய ஆரம்பக் கல்வித் திட்டத்தை ஆராய்வதற்காகவும், அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுக் காலத்திற்குள் 14 வயதுக்குட்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்று இந்திய அரசியல் திட்டத்தில் உள்ள 45 வது விதியை நடைமுறைக்குக் கொண்டுவர என்னென்ன வழிவகைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை வகுப்பதற்காகவும் சென்னை அரசாங்கத்தால் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது. சட்ட சபைகள், பாராளுமன்றம் ஆகியவற்றின் உறுப்பினர்கள், ஜில்லா போர்டுகள் முனிசிபாலிடிகள் பஞ்சாயத்துப் போர்டுகள் ஆகியவற்றின் தலைவர்கள், ஆசிரியர் சங்கங்கள், மானேஜர்களின் சங்கங்கள், கல்வித் தொடர்புள்ள ஏனைய அமைப்புகள், கல்வித்துறை நிபுணர்கள், பொதுவாக கல்வியில் அக்கரை உடையவர்கள் ஆகியவர்கள், இந்தக் கேள்விப் பட்டியலுக்கான விடைகளை அனுப்பி வைப்பார்களானால், கமிட்டியினர், தங்கள் கடமையை நிறைவேற்றுவது எளிதில் இயல்வதாகும். இந்தக் கேள்விப் பட்டியலில், அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில், விடைகள் வடிவில், அவரவர்கள், தத்தம் கருத்துக்களையும் யோசனைகளையும் எழுதலாம். இந்தக் கேள்விப் பட்டியலில் இடம் பெறாத ஏதாவது பிரச்சினைகளைப் பற்றித் தங்கள் கருத்தை எழுத வேண்டியது அவசியம், என்று தோன்றினால், அதனைத் தனியாக ஒரு தாளில் எழுதி கேள்விப் பட்டியலோடு இணைத்து விடலாம். ஒவ்வொருவரும் இதில் உள்ள எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதியாக வேண்டும் என்கிற அவசியமில்லை. விடை எழுதுபவர்கள், தாங்கள் அவசியம் என்று கருதுகிற கேள்விகளுக்கு மட்டும் விடை எழுதினால் போதும். கருத்துக்கள் சுருக்கமான முறையில் எழுதப் பட்டால் மிகவும் நல்லது. முடிந்த இடத்திலெல்லாம், தங்கள் கருத்துக்களுக்கான காரணங்களையும் தருவது நலம்.

கேள்விப் பட்டியலுக்கான விடைகள், திருவாளர் எஸ். வடிவேலு, செயலாளர், ஆரம்பக் கல்விக் கமிட்டி, கல்வி இலாகா அதிகாரி ஆபீஸ், சென்னை 6 (Mr. S. Vadivelu, Secretary, Elementary Education Committee, Office of the Director of Public Instruction, Madras 6) என்கிற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும். 1955 பிப்ரவரி முதல் தேதிக்

குள் கமிட்டியின் செயலாளருக்குக் கிடைக்கும் வகையில் விடைகள் அனுப்பப்படவேண்டும்.

## கேள்விப் பட்டியல்

### 1. நோக்கங்கள்

#### நிபுணர் குழுவின் கேள்விகள்

1. கீழ்க்கண்டவற்றில் எது ஆரம்பக் கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

(அ) எழுதவும் படிக்கவும் கணக்குப் போடவும் கற்றுத் தருவது.

(ஆ) அவற்றைக் கற்றுத் தருவதோடு, தொழில் திறமையையும் புகட்டுவது.

(இ) அவை இரண்டோடும், பொது அறிவையும் வளர்ப்பது.

(ஈ) குழந்தை வளர்கிற சமுதாயத்தின் கூட்டு மொத்த வாழ்க்கை நிலை உயர்வையும், குழந்தையின் முழு வளர்ச்சியையும் நாடுவது.

(உ) சகிண்டரி கல்வியைப் பெறுவதற்காக மாணவர்களைத் தயார் செய்வது.

(ஊ) வேறு ஏதாவது நோக்கங்கள்.

#### நம் விடைகள்

1. இந்தக் கேள்வியின் "ஆ" உட்பிரிவில் காணப்படுகின்ற "தொழில் திறமையைப் புகட்டுவது" என்னும் அந்த ஒரு நோக்கம் தவிர இந்தக் கேள்வியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய எல்லா நோக்கங்களும் ஆரம்பக் கல்வியின் அடிப்படைகளாக அமைய வேண்டியவைதான். இப்போதே அப்படித்தான் இருந்து வருகிறது. ஆரம்பப் பள்ளிகளில் பயில்கின்ற 5 முதல் 13 வயது வரை உள்ள சின்னஞ் சிறு குழந்தைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டுவது முடியாத செயல். முடிந்தாலும், செய்யக் கூடாத காரியம். 14 வயதுக்குட் பட்ட சிறுவர்களைத் தொழிற் சாலைகளில் வேலைக்கு வைத்துக் கொண்டால் தொழிற்சாலை முதலாளிகளுக்குத் தண்டனை உண்டு என்று தெரிவிக்கிறது தொழிற் சாலைச் சட்டம். இப்படிப்பட்ட சட்டத்தின் மூலம் சிறுவர்களிடமிருந்து வேலை வாங்குவதை அரசாங்கம் தடுப்பதற்குக் காரணம், சின்னஞ் சிறு குழந்தைகளைக் கடின வேலைகளில் ஈடுபடுத்துவது ஜீவகாருண்யமற்ற செயல் என்பதுதான். 14 வய

துக்கு உட்பட்ட சிறுவர்களிடமிருந்து, தொழிற்சாலைகளில், தொழில் என்கிற பெயரால், சம்பளத்தோடு வேலை வாங்குவதே குற்றம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொண்டு அதற்குச் சட்டமும் இருக்கும் போது, அதே சிறுவர்களிடமிருந்து அதே வேலையை, பள்ளிக்கூடங்களில் கல்வி என்ற பெயரால் சம்பளமின்றி வாங்குவது மட்டும் எப்படி நியாயமாகும்? மாணவர்களுக்குத் தொழில் திறமையைப் புகட்டுவது என்கிற நோக்கம் செகண்டரி பள்ளிகளில் இருக்க வேண்டியது மிக மிக முக்கியம். ஆனால் ஆரம்பப் பள்ளிகளில் அது கூடாது.

## 2. அமைப்பு முறை

2. ஆரம்பக் கல்வி எத்தனை ஆண்டுகளுக்குப் போதிக்கப்பட வேண்டும்?

2. இப்போது இருப்பதைப் போலவே எட்டு ஆண்டுகளுக்குப் போதிக்கப்பட வேண்டும்.

3. நாள்தோறும் பள்ளிக்கூடம் பணியாற்றுவது எத்தனை மணி நேரமாக இருக்க வேண்டும்?

3. ஐந்து மணி நேரம் இருந்தால் போதும். மருத்துவ நூலார் கருத்துப்படி, மாணவர்களை ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார வைத்திருப்பது, உடல் நலத்திற்கும் உள நலத்திற்கும் ஒருங்கே ஊறு செய்வதாகும். காலை வேளை இரண்டரை மணிநேரமும், மாலை வேளை இரண்டரை மணி நேரமுமாக ஐந்து மணி நேரம் வகுப்பு இருப்பதே சாலச்சிறந்தது.

4. ஆரம்பப் பள்ளியில் சேர்வதற்கான பிள்ளைகளின் குறைந்த பட்ச வயது, 5 வயது

4. இப்போது உள்ளபடியே இருக்கலாம். மாற்றம் தேவையில்லை.

முடிந்திருக்க வேண்டும் என்று இப்போது உள்ளபடியே இருக்க லாமா? அல்லது இதில் ஏதாவது மாற்றம் தேவையா? தேவை என்றால், குறைந்தபட்ச வயது எதுவாக இருக்கவேண்டும்?

5. உயர்தர ஆரம்பப் பள்ளி அல்லது சீனியர் பேசிக் என்றும், மிடில் ஸ்கூல் என்றும் இரண்டு வகைப் பள்ளிகள் ஒரே வகை வயதுடைய பிள்ளைகளுக்காக இருந்துவரும் இப்போதைய முறை தொடர்ந்து இருப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா? (விரும்புகிறோம், அல்லது விரும்பவில்லை என்பதை மட்டும் தெரிவித்தால் போதும்.)

5. நிச்சயமாக விரும்ப வில்லை. இந்த முறை உடனடி யாக ஒழிந்தாக வேண்டும்.

6. ஒரே ஒரு வகைப் பள் ளிக்கூடம் தான் இருத்தல் வேண்டும் என்பது உங்கள் கருத் தாயின், கீழ்க்கண்ட மூவகைப் பள்ளிகளில் எந்த ஒரு வகை மட்டும் இருக்க வேண்டுமென்று நீங்கள் கருதுகிறீர்கள்?

i. உயர்தர ஆரம்பப் பள்ளி
ii. சீனியர் பேசிக் பள்ளி
iii. மிடில் ஸ்கூல்

6. உயர்தர ஆரம்பப் பள்ளி மட்டும்.

7. ஆரம்பப் பள்ளிகளில், மாணவர்களிடமிருந்து சம்பளம் வாங்குவதை அனுமதிக்கலாமா? அனுமதிக்கலாம் என்றால், அவர் கள் கட்டவேண்டிய சம்பளத் திற்கு அதிக பட்ச எல்லை ஒன்றை நிர்ணயிக்க வேண்டுமா?

7. ஏழைப் பெற்றோர்களின் பிள்ளைகளிடமிருந்து சம்பளம் வாங்கக் கூடாது. ஆனால், ஒரு குறிப்பிட்ட அளவுக்குமேல் வரு மானமுடைய பெற்றோர்களிட மிருந்து சம்பளம் வாங்குவதில் தவறில்லை. மாணவர்கள் கட்ட

ஆமாம் என்றால், இந்த எல்லை எதுவாக இருக்க வேண்டும்?

வேண்டிய சம்பளத்திற்கு அதிக பட்ச எல்லையை நிறுவுவது நல்லதுதான். 5-வது வகுப்பு வரை அதிக பட்ச சம்பளம் ரூ. 1–8–0 ஆகவும், 6 முதல் 8 வரை உள்ள வகுப்புகளுக்கு அதிக பட்ச சம்பளம் ரூ. 3–0–0 ஆகவும் இருக்கலாம்.

## 3. பாடதிட்டம்

8. (அ) இப்போதுள்ள பாடதிட்டம்,

i. போதுமானது என்று
ii. மிக அதிகம் என்று

அல்லது

iii. மிகக் குறைவு என்று

எப்படி நீங்கள் கருதுகிறீர்கள்? மிக அதிகம் என்று கருதினால்,

i. இப்போதுள்ள பாடங்களில் (Subjects) ஏதாவது ஒன்றை எடுத்து விடுவது நல்லது என்பது உங்கள் கருத்தா? அல்லது.

ii. இப்போது உள்ள பாடங்களில் சிலவற்றை, குழந்தையின் சுற்றுச்சார்பு (Child's environment) சமூகக் கல்வி (Social studies) என்பன போன்ற அல்லது இவற்றைவிடக் கவர்ச்சிகரமான சற்று விரிவான தலைப்புகளின்கீழ் சுருக்கித் தொகுத்து விடுவது நல்லது என்பது உங்கள் கருத்தா?

இப்போது உள்ள பாடதிட்டம் பொருத்தமானதல்ல என்று நீங்கள் கருதினால், எந்த வகையில் அது பொருத்தமாக இல்லை என்பதையும், எப்படி எப்படி

8. (அ) இப்போதுள்ள பாடதிட்டம் மிக அதிகமுமில்லை, மிகக் குறைவுமில்லை. சரியான அளவில் தான் இருக்கிறது.

இப்போதுள்ள பாடங்களில் எதையும் எடுத்துவிட முடியாது. தாய் மொழி, கணிதம், நிலநூல், வரலாறு, இயற்கைப் பாடம், ஆட்சி நூல்—இவற்றிலே எதை எடுக்க முடியும்? ஒவ்வொன்றும் அவசியமானதுதான்.

பாடங்களில் சிலவற்றை சமூகக் கல்வி என்பது போன்ற தலைப்புகளின் கீழ்த் தொகுப்பதால் துளியும் நன்மையில்லை. செகண்டரி கல்வியில், சென்ற சில ஆண்டுகளாக, வரலாறு நிலநூல் விஞ்ஞானம் ஆகிய மூன்றும் சமூக நூல் (Social Studies) என்கிற பெயரின் கீழ் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுப் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. அத்தகைய தொகுப்புப் பயிற்சியின் விளைவாக மாணவர்கள் எந்தப் பாடத்திலும் சிறந்த திறமை பெறாமல் குழப்பமான ஒரு வகை மன நிலையையே அடைகிறார்கள் என்பதை நாம் அனுபவத்தில் பார்த்து வரு

அதனை மாற்றி யமைக்க வேண்டும் என்பதையும் தெரிவிக்கவும்.

கிறோம். இதே வகைக் குழப்பத்தையும் திறமைக் குறைவையும் ஆரம்பப் பள்ளிகளிலும் ஏன் நுழைக்க வேண்டும்?

முன்னரெல்லாம், ஆங்கிலம், மூன்றாவது வகுப்பிலிருந்து தொடங்கப்பட்டது. ஆனால் இப்போது ஆறாவது வகுப்பிலிருந்து தான் தொடங்கப்படுகிறது. இது கூடாது. பழையபடி, ஆங்கிலம், மூன்றாவது வகுப்பிலிருந்துதான் தொடங்கப்பட வேண்டும். ஆங்கில ஏகாதிபத்யத்தின்மீது முன்னர் நாம் காட்டிய நியாயமான வெறுப்பை ஆங்கில மொழியின்மீது இப்போது காட்டுவதில் பொருளே இல்லை. ஆங்கிலம், உலகப் பொது மொழி. விஞ்ஞான வளர்ச்சி மிகுந்த மொழி. எந்தக் கலையைப்பற்றியும் எந்தத் தொழிலைப் பற்றியும் ஏராளமான புத்தகங்கள் நிரம்பியுள்ள மொழி. எனவே, அதில் நமக்குப் பயிற்சி மிகவும் அவசியம்.

8. (ஆ) மொழி, கணக்கு ஆகிய பாடங்களின் திட்டத்தில், திறமையை அதிகப் படுத்துவதற்காக, ஏதாவது மாறுதல் தேவையா? தேவையென்றால் எந்த வகையில்?

8 (ஆ) மொழிப் பயிற்சியைப் பொறுத்த அளவில், இராமாயணம் மகாபாரதம் போன்ற இதிகாச ஏடுகளிலிருந்து கதைகள் கூறப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இந்த ஏடுகளெல்லாம் இன்றைய தினம், நாட்டில், ஒரு சாராரால் புனிதமான ஏடுகள் என்று போற்றப்படுகின்றன. மற்றொரு சாராரால் தேவையற்ற பழங்காலச் சரக்கு என்று ஒதுக்கப்படுகின்றன. இந்த ஏடுகளைப் பற்றி ஆதரித்தும் தாக்கியும் பாராட்டியும் கண்டித்தும் நாட்-

டிலே அதிதீவிர வாதப் பிரதி வாதங்களும் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் நடைபெற்று வருகின்றன. இந்த இரு வகைக் கருத்துகளிலே எது நியாயம் எது தவறு என்பது வேறு பிரச்சினை. இங்ஙனம் நாட்டிலே பெரும் குழப்பத்திற்கும் போராட்டத்திற்கும் இடமாகி விட்ட கருத்துக்களை, பள்ளிக்கூடங்களில் ஏன் நுழைய விட வேண்டும் என்பதே நமது கேள்வி. ஆதரிப்பவர் ஆதரிக்கட்டும். எதிர்ப்பவர் எதிர்க்கட்டும். அது அவரவர்கள் ஆராய்ச்சியையும் விருப்பத்தையும் பொறுத்த விஷயம். ஆனால் பள்ளிக்கூடக் கல்வியைப் பொறுத்த வரையில் இந்த ஏடுகள் இடம் பெறாமல் இருந்தால் தான் அங்கே குழப்பம் இல்லாமல் இருக்கும். அவசியமில்லாமல் ஆரம்பக்கல்வியில் இந்த ஏடுகளைக் கொண்டு வந்து திணிப்பானேன்? அதன் பிறகு இங்கேயும் போராட்டங்கள் தோன்றுமானால் கைகளைப் பிசைந்து கொண்டு வருந்துவானேன்?

9. பள்ளிக்கூடத்தில் பாடங்களைப் புகட்டுவதற்காக இப்போது கையாளப் பட்டுவரும் முறைகள், மாணவர்களின் தன் முயற்சிப் பணிக்குத்(for pupils' activity) தேவையான அளவு வாய்ப்புகளை, அளிப்பனவாக உள்ளனவா? இல்லையென்றால், அந்த வாய்ப்புகளை அதிகப்படுத்துவதற்கு எத்தகு வழிகள் தேவையென நீங்கள் கருதுகிறீர்கள்?

9. இப்போது உள்ள முறைகளே போதும்.

10. இப்போதுள்ள கல்விப் பயிற்சி முறைக்குப் பதிலாக, கைத் தொழில்கள் மூலமே எழுத்தறிவைக் கற்கவேண்டும் என்கிற முறையை ஏற்படுத்துவது சரியென்று நீங்கள் கருதுகிறீர்களா?

10. ஒருக்காலும் இல்லை. கைத்தொழில்கள் மூலமே எழுத்தறிவைக் கற்பிப்பது என்பது ஒரு நாளும் நடக்காத காரியம்.

11. தற்போதுள்ள ஆதாரப் பள்ளிகளைக் குறித்து உங்கள் கருத்தென்ன? அவற்றை மேலும் வளரச் செய்வதற்கு ஏதாவது வழிகளைக் கூறமுடியுமா?

11. ஆதாரப் பள்ளிகள் அத்தனையையும் உடனடியாக ஆரம்பப் பள்ளிகளாக மாற்றிவிட வேண்டும். ஆதாரப் பள்ளி என்கிற பெயரால் செலவிடப்படுகின்ற காலம், முயற்சி, செல்வம் அத்தனையும் வீண், வீண். ஓர் ஆதாரப் பள்ளிக்காகச் செலவிடப்படுகின்ற காலத்தையும் முயற்சியையும் பணத்தையும் வைத்துக்கொண்டு குறைந்தது மூன்று ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கமுடியும். தொடங்கவும் வேண்டும். ஆதாரப் பள்ளி என்பதே ஓர் அர்த்தமற்ற சொல்லடுக்கு. அதற்காக நாட்டின் செல்வத்தை வீணாக்குவது, சகிக்க முடியாத ஒரு குற்றம்.

12. ஒவ்வொரு பிள்ளையும், நாள்தோறும் ஐந்து மணி நேரம் பள்ளிக்கூடத்தில் இருக்கவேண்டியது அவசியம் என்பது உங்கள் கருத்தா? இல்லை என்றால், எத்தனை மணி நேரம் இருந்தால் போதும்? காரணம் என்ன?

12. ஐந்து மணி நேரம் இருக்கவேண்டியதுதான். பள்ளிக்கூட நேரம் ஐந்து மணியை விடக் குறைவாக இருப்பதை எந்தப் பெற்றோரும் விரும்புவதில்லை.

13. ஆரம்பக் கல்வித் திட்டத்தில் கீழ்க்கண்ட நடைமுறைகளையும் சேர்த்துக் கொள்ள முடியும்; கொண்டால் நலமுண்டு என்று நீங்கள் கருதுகிறீர்களா?

13. சமுதாயப் பிரார்த்தனை ஒன்றைத் தவிர, ஏனைய எல்லாத் திட்டங்களையும் சேர்த்துக்கொள்வது நல்லதுதான். பிரார்த்தனை என்பது அவரவர்களின் சொந்த

(i) கொடியேற்றல்

(ii) சமுதாயப் பிரார்த்தனை

(iii) மாணவர்களின் சுய ஆட்சி

(iv) சுற்றியுள்ள பகுதிகளைத் தூய்மைப் படுத்துவதற்கான நடைமுறைகள்.

(v) விழாக் கொண்டாட்டங்கள்.

(vi) வேறு வகையான கலாச்சார, பொழுதுபோக்குத் திட்டங்கள்.

விஷயம். எனவே அதனை அவரவர்களுடைய வீட்டில், அவரவர்களுக்கு உகந்த முறையில் நடைபெற விடுவதே நல்ல முறை. பல்வேறு மதங்களையும், மத உட்பிரிவுகளையும், சமயக் கொள்கைகளையும் சார்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிகளில் படிப்பார்கள். ஒவ்வொரு சாராசரின் பிரார்த்தனை ஒவ்வோர் வகையினதாக இருக்கும். முஸ்லிம்களின் பிரார்த்தனை ஒரு விதம். கிறித்தவர்களின் பிரார்த்தனை மற்றோர் விதம். இந்துக்களின் பிரார்த்தனை வேறோர் வகை. சமண புத்த மதங்களைச் சார்ந்தவர்கள் பிரார்த்தனை செய்வது முற்றிலும்வேறோர் வகை. ஆரிய சமாஜம், பௌத்த சமாஜம், சுய மரியாதை இயக்கம், ஆகியவற்றைச் சார்ந்த பெற்றோர்களும் நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள். இங்ஙனம் பல்வேறு வகைப்பட்ட மதத்தினரும் எம் மதத்தையும் சாராதவர்களும் படிக்கும் பள்ளிகளில், எல்லோருக்கும் ஒத்ததான ஓர் பிரார்த்தனையை வகுப்பது கஷ்டம். வகுத்தாலும் பிணக்குகள் வருவது இயற்கை. எனவே பள்ளிகளில் பிரார்த்தனை தேவையில்லை. அதற்கு உரிய இடம், அவரவர்களுடைய வீடு.

14. இவற்றைத் தவிர பள்ளிக்கூடத்தில் கையாளப்பட வேண்டிய வேறு ஏதாவது பணி அல்லது நடைமுறை இருக்கிறதா?

14. இருக்கிறது. அக்கம் பக்கத்திலுள்ள வரலாற்றுச் சிறப்புப் படைத்த ஊர்களுக்கும், காணத் தகுந்த காட்சிகள் வாய்ந்த ஊர்களுக்கும் மாணவர்

களை அழைத்துக் கொண்டு ஆசிரியர்கள் உல்லாசப் பயணம் போய் வரலாம். மாணவர்களின் பொது அறிவை வளர்ப்பதற்காகப் பல பள்ளிகள் ஒன்றாகச் சேர்ந்து பொதுவிடத்தில் பொருட்காட்சிகள் பல நடத்தலாம். பல பள்ளிகளுக்கு ஓர் இடம் என்கிற முறையில், மாணவர்களின் அறிவை வளர்க்கத் தக்க பொது அறிவு பற்றிய படக்காட்சிகள் நடத்தலாம்.

15. இப்போதைய பாடதிட்டத்தை மாற்றி அமைப்பதற்கான தகுந்த கருத்து வேறு ஏதாயினும் உண்டா?

15. இல்லை.

16. (அ) இப்போது இருப்பதைப் போலவே ஒழுக்கக் கல்வியை (Moral Instruction) தொடர்ந்து கொடுத்துவந்தால் போதும் என்று எண்ணுகிறீர்களா?

(ஆ) அல்லது, **அதற்குப் பதிலாக**, மதக் கல்வியை (Religious Instruction) புகட்டுவது நல்லது என்று எண்ணுகிறீர்களா?

17. ஒழுக்கக் கல்வியையும் (Moral Instruction) வைத்துக் கொண்டு, அதனோடு கூட மதக் கல்வியையும் வைத்துக் கொள்வது நலம் என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்களா?

16, 17. இப்போது இருப்பதைப் போலவே பள்ளிக்கூடங்களில் ஒழுக்கக் கல்வியை மட்டும் கொடுத்துவந்தால் போதும். அதனோடு கூடவோ அல்லது அதற்குப் பதிலாகவோ மதக் கல்வியைத் தரவேண்டியது அவசியமில்லை. பல்வேறு மதத்தைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிகளில் பயில்கிறார்கள். எனவே எந்த ஒரு மதத்தின் கல்வியையும் பள்ளிகளில் புகட்ட இயலாது. புகட்டினால், பூசலும் பிணக்கும் பகையும் போருமே உண்டாகும். அவரவர்களுடைய மதம் அவரவர்களுடைய வீட்டோடு இருக்கட்டும். பள்ளிக்கூடங்களில் நுழையவேண்டாம். மேலும் நம்முடைய நாட்டில் இருப்பது மதச் சார்பற்ற ஆட்சி (Secular state) என்று இந்திய அரசியல் திட்டம் தெள்ளத் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

இந்நிலையில், பள்ளிக்கூடங்களில் மதக் கல்வியை நுழைத்தால், அது, அரசியல் திட்டத்திற்கே முரண்பாடாக முடியும்.

18. மதக் கல்விப் பயிற்சி அவசியம் என்று நீங்கள் கருதினால், கீழ்க்கண்ட இரு முறைகளில் எந்த முறையை நீங்கள் விரும்புகிறீர்கள்?

i. பள்ளிக்கூடத்தில், பள்ளிக்கூட நேரத்திலேயே அதனைப் பயிற்றுவிப்பது.

ii. பள்ளிக்கூடத்தில், பள்ளிக்கூடநேரம் முடிந்தபிறகு அதனைப் பயிற்றுவிப்பது.

18 ஒருக்கால் மதக்கல்வி அவசியம்தான் என்று முடிவு செய்யப்பட்டால், அது, **பள்ளிக்கூட நேரத்துக்குப் பிறகுதான்** பயிற்றுவிக்கப் படவேண்டும். அதுவும், எந்தெந்தப் பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளுக்கு மதக் கல்வியைத் தரலாம் என்று எழுத்துமூலம் ஒப்புதல் தருகிறார்களோ அவர்களுடைய பிள்ளைகளுக்கு மட்டும்தான் தரலாம்.

19. மதக் கல்விப் பயிற்சியானது, (i) ஆசிரியர்களாலேயே தரப்பட வேண்டுமா? அல்லது ii வேறு யாராலாவது தரப்பட வேண்டுமா? வேறு யாராலாவது என்றால், யாரால்?

19. ஆசிரியர்களால்தான்.

## 4. இந்திய அரசியல் திட்டத்தின் 45—வது விதியை நடைமுறைப்படுத்துவதற்கான வழி வகைகள்.

20. 1950ல் இந்திய அரசியல் திட்டம் நடைமுறைக்கு வரத் தொடங்கியதிலிருந்து பத்தாண்டுக் காலம் முடிவதற்குள், 14 வயதுக்குட்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க அரசாங்கம் முயற்சிசெய்தல் வேண்டும் என்று இந்திய அரசியல் திட்டத்தின் 45 வது விதி தெரிவிக்கிறது. கீழ்க்கண்ட முறைகளில் எதனைக் கையாண்டால் மேற்படி

20. அதிகப்படியான ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதே மிகவும் முக்கியம். லோயர் எலிமெண்டரி பள்ளிகளை ஹையர் எலிமெண்டரி பள்ளிகளாக மாற்றுவது அடுத்தபடி முக்கியம், ஷிப்ட் முறையை, பரீட்சார்த்தமாக, ஏதாவது ஒருஜில்லாவில், ஒரு தாலுகாவில் மட்டும் கையாண்டு பார்க்கலாம். அங்கே அது வெற்றி தருவதாக இருந்தால், அதனை, பிறகு, படிப்படி

விதியை நடை முறைப்படுத்த முடியும்? சென்னை ராஜ்யத்தின் பொருளாதார நிலையை நினைவில் வைத்துக்கொண்டு விடையைத் தரவும். கீழ்க்கண்ட முறைகளில், ஒன்றுக்கு மேற்பட்ட வற்றை நீங்கள் விரும்பினால், எதற்கு முதல் முக்கியத்வம் தரப்பட வேண்டும், எதற்கு இரண்டாவது, மூன்றாவது, முக்யத்வம் தரப்படவேண்டும் என்கிற வரிசைமுறையையும் எழுதவும்.

i. அதிகப்படியான ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவது.

ii. தற்போதுள்ள லோயர் எலிமென்டரி பள்ளிகளை ஹயர் எலிமென்டரிபள்ளிகளாக உயர்த்துவது.

iii. ஷிப்ட் முறையைக் கையாள்வது

iv. நீங்கள் தெரிவிக்கக்கூடிய வேறு ஏதாவது முறைகள்.

யாகப் பிற இடங்களுக்கும் விரிவுபடுத்தலாம். ஆனால் இதனை ஒரு பரீட்சார்த்த முறையாகத் தான் வைத்துக் கொள்ளவேண்டும். இதுபோது, அரசாங்கத்தின் முழு கவனமும், எங்கெங்கு முடியுமோ அங்கெல்லாம் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதில் தான் பதிய வேண்டும். கிராமத்திற்கோர் பாடசாலை என்கிற இலட்சியமே அரசாங்கத்தின் இருதய கீதமாக அமையவேண்டும். 500 பேருக்குக் குறையாத மக்கள் தொகை உடைய எல்லா ஊர்களிலும் முதலில் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்படவேண்டும். அதன்பிறகு 250 முதல் 500 வரை மக்கள் தொகை உடைய ஊர்களிலும் பள்ளிகள் நிறுவப்படுதல் அவசியம்.

21. ஷிப்ட் முறையை நீங்கள் ஒப்புக் கொள்வதாக இருந்தால், ஒவ்வொரு ஷிப்டின் நேரம் எவ்வளவு இருத்தல் வேண்டும்?

21. பரீட்சார்த்தமாக ஷிப்ட் முறை கையாளப்படுகிற இடங்களில், ஒவ்வொரு ஷிப்டின் நேரமும், மூன்றுமணியாக இருக்க வேண்டும்.

22. ஷிப்ட் முறையை நீங்கள் ஏற்றுக் கொள்வதானால், i. ஒரே 'செட்' ஆசிரியர்கள் இரண்டு ஷிப்ட்களிலும் பணியாற்றுவதை நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது ii ஒவ்வொரு ஷிப்டுக்கும் தனித்தனி செட் ஆசிரியர்கள் பணியாற்றுவதை விரும்புகிறீர்களா?

22. ஒரே செட் ஆசிரியர்கள் பணியாற்றுவதையே விரும்புகிறோம். ஆனால் அவர்களுக்கு அதற்கு ஏற்ற அதிகப்படி சம்பளம் தரப்படவேண்டும்.

23. ஒரு 'ஷிப்ட்' மாணவர்கள் கல்வி பயிலும் நேரத்தில்,

i. இரண்டாவது ஷிப்ட் மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

ii. அப்போது யாரால் அவர்கள் கவனிக்கப்பட வேண்டும்?

iii. எத்தகு நடவடிக்கைகளில் அம் மாணவர்கள் அதுபோது ஈடுபட வேண்டும்?

(iv) பள்ளிக்கூடத்திற்கு வெளியே, அத்தகு நடவடிக்கைகள் இருப்பதானல் அவற்றை அமைத்து நடத்தும் பொறுப்பை யார் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

23. ஒரு ஷிப்ட் மாணவர்கள் பணியாற்றும் நேரத்தில், மற்றொரு ஷிப்ட் மாணவர்களை அவர்களுடைய வீடுகளுக்கு அனுப்பிவிடுவதே சிறந்த முறை. அதைத் தவிர வேறு எந்த ஏற்பாடும் இன்றைய நிலையில் நடக்கக்கூடியல்ல.

24. கீழ்க்கண்ட முறைகளில் எதனை நீங்கள் விரும்புகிறீர்கள்?

i. கட்டாயக் கல்வியை, முதலில் ஒன்று முதல் ஐந்து வரையுள்ள வகுப்புகளுக்கு வைத்திருந்து, அந்தத் திட்டம் வெற்றி பெற்றதும், 6 வது முதல் 8 வது வகுப்பு வரை அதனை விரிவு படுத்துவது.

ii. கட்டாயக் கல்வியை இப்போதே எட்டாவது வகுப்பு வரை அமுலுக்குக் கொண்டு வருவது.

iii. மேற்படி இரண்டு திட்டங்களில் எதை நீங்கள் ஒப்புக்கொண்டாலும் சரி, அதனை, சென்னை ராஜ்யம் முழுதிலும் ஒரே சமயத்தில் நடைமுறைக்குக் கொண்டுவருவதா? அல்லது

24. முதல் உட்பிரிவில் தரப்பட்டுள்ள முறையே சிறந்தது. அதனை, ராஜ்யம் முழுவதிலும் ஒரே சமயத்தில் கொண்டு வருவதே மிகவும் நல்லது.

ஒரு வட்டாரத்திற்குப் பின் மற்றொரு வட்டாரம் என்கிற முறையில் படிப்படியாகக் கொண்டு வருவதா ?

iv. கட்டாயக் கல்வியைக் கொண்டுவர வேறு ஏதாவது முறைகள் இருந்தால் தெரிவிக்க.

25. கீழ்க்கண்ட வயதுத் தொகுப்புகளில், எதில், கட்டாயக் கல்வியை அமுலாக்குவது சிறந்தது என்பது உங்கள் கருத்து ?

i. 6 முதல் 14 வயது வரை

ii. 5 முதல் 13 வயது வரை

iii. வேறு ஏதாவது வயதுத் தொகுப்பு.

25. 6 முதல் 14 வயது வரை.

26. அரசியல் திட்டத்தின் 45 வது விதியை நடைமுறைக்குக் கொண்டுவரும் திட்டத்திற்கு, அந்தந்த வட்டாரத்து மக்களின் ஒத்துழைப்பைப் பெறமுடியுமா? எந்த அளவில்? எந்தத் தன்மையில் ?

26. பெறமுடியும், ஒவ்வோர் இடத்தில், ஒவ்வோர் அளவுக்கு.

கட்டிடம் கட்டவும், பண்டங்கள் கருவிகள் வாங்கவும், சிலரிடமிருந்து பண உதவியையும், சிலரிடமிருந்து உழைப்பு உதவியையும், வேறுசிலரிடமிருந்து செங்கல், சுண்ணும்பு, மரப்பலகை முதலிய சாமான்களின் உதவியையும் பெற இயலும். அரசாங்கம், ஒவ்வோர் ஊரிலும், சர்வ கட்சியினரையும் கொண்ட கமிட்டிகள் அமைத்து, அவற்றின் மூலமாகப் பொது மக்களை நாடினுல், கணிசமான அளவுக்கு, உதவி நிச்சயமாகக் கிடைக்கும்.

## 5. சேர்க்கும் முறையும், வீணுகும் நிலையும்

27. பள்ளிக்கூடம் போக வேண்டிய வயதுடைய பிள்ளை

27. வறுமையும், வீட்டிற்கு அண்மையில்பள்ளிக் கூடங்

களில் ஏராளமான பேர் இப்போது பள்ளிக்கூடம் போகாமல் இருக்கிறார்கள். இந்த நிலைமைக்கு, கீழ்க்கண்டவற்றில், எது காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? ஒன்றுக்கு மேற்பட்டவை காரணங்கள் என்று நீங்கள் கருதினால், எது மிக முக்கியமான காரணம், எது இரண்டாவது முக்கியம், எது மூன்றாவது நான்காவது முக்கியம் என்பன போன்றவற்றை விளக்க, 1, 2, 3 என்கிற முக்யத்வ வரிசையைக் குறிப்பிடவும்.

(i) வறுமை.

(ii) பள்ளிக்கூடத்தில் இடமில்லாத காரணம்.

(iii) வீட்டிற்கு அண்மையில் பள்ளிக்கூடம் இல்லாத காரணம்.

(iv) போதுமான அளவு ஆசிரியர்கள் இல்லாமை.

(v) பெற்றோர்களின் அலட்சியம்.

(vi) பிள்ளைகளின் அலட்சியம்

(vii) பள்ளிக்கூட நேரம் பொருத்தமாக இல்லாதது.

(viii) வேறு காரணங்கள்.

கள் இல்லாததுமே முக்கிய காரணங்களாகும். மற்ற காரணங்கள் பொருத்தமானவை அல்ல.

28. நகரப் பகுதிகளில் இருக்கின்ற அளவுக்கு கிராமப் பகுதிகளில் மாணவர்கள் பள்ளிக்கூடத்தில் சேர்வதுமில்லை, சேர்பவர்களும் ஒழுங்காக வருவதில்லை. இதற்கு எது காரணம்?

28. வறுமைதான்.

29. கீழ்க்கண்ட முறைகளில் எதனை அல்லது எவற்றைக் கை

29. உட்பிரிவுகள் i, ii, v, vi ஆகியவற்றில் குறிப்பிடப்பட்

யாண்டால், இப்போது பள்ளிக் கூடத்தில் சேராமல் இருக்கின்ற பிள்ளைகளை, குறிப்பாக, பிற்பட்ட வகுப்புகள், ஏழைவகுப்புகளின் பிள்ளைகளைப் பள்ளியில் சேரும்படி செய்யமுடியும்?

i. பகல் உணவு, புத்தகங்கள், பலகைகள் ஆகியவற்றை இலவசமாக அளிப்பது.

ii. பிள்ளைகள் வாழும் பகுதிகளுக்கு அண்மையில் பள்ளிகள் இருப்பது.

iii. அதிகப்படியான விளையாட்டுகளும் பொழுதுபோக்குகளும் பாட திட்டத்தில் அமைந்திருப்பது.

iv. சில மணி நேரம் மட்டும் பள்ளி இருப்பது (Part time Schooling).

v. கட்டாயமாய்ப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாகவேண்டும் என்கிற திட்டத்தைக் கொண்டுவருவது.

vi. ஆரம்பக் கல்வியின் அவசியத்தை வற்புறுத்திப் பிரசாரம் செய்வது.

vii. வேறு ஏற்பாடுகள்.

டுள்ள திட்டங்கள் உடன்டியாக நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இந்த நான்கிலும் கூட, முதல் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி பகல் உணவு, புத்தகங்கள், பலகைகள் ஆகியவற்றை இலவசமாக அளிக்கும் திட்டமே பெரும்பயன் அளிக்கத்தக்கதாகும்.

30. ஆரம்பப் பள்ளிகளில், சேரும் மாணவர்கள், கடைசி வகுப்பு வரை படித்து முடிக்காமல், இடையிலேயே நின்று விடுவதற்கு, கீழ்க்கண்டவற்றில், எது காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்? ஒன்றுக்கு மேற்பட்டவை காரணங்களாயின் முக்யத்வ வரிசையைக் குறிப்பிடவும்.

30. ஏழ்மைதான் மூலகாரணம். பெற்றோர்களின் அலட்சியம் சில இடங்களில் ஒரு காரணமாகக் காணப்படுகிறது என்றாலும், அந்தக் காரணத்திற்கும் மூல வேர், ஏழ்மைதான். iii, iv உட்பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை, பொருத்தமான காரணங்கள் அல்ல.

i. ஏழ்மை.

ii. பெற்ரோர்களின் அலட்சியம்.

iii. கவர்ச்சிகரமான முறையில் பள்ளிக்கூடங்கள் இல்லாமை.

iv. கவர்ச்சிகரமான முறையில் பாடங்களைப் பயிற்றும் முறைகள் இல்லாமை.

v. வேறு காரணங்கள்.

31. பிள்ளைகள் கடைசிவரை பயிலாமல் இடையிலேயே நின்றுவிடுவதைத் தடுக்க (பெற்றோர்களைக் கட்டாயப்படுத்துவதைத் தவிர வேறு) எம்முறைகளை நீங்கள் கையாள விரும்புகிறீர்கள்?

31. கல்விப் பயிற்சிக்காக மாணவர்கள் சம்பளம் கட்ட வேண்டிய அவசியம் இருக்கக் கூடாது. பகல் உணவு, புத்தகங்கள், பலகைகள் முதலியன இலவசமாக அளிக்கப்படவேண்டும். பிள்ளைகள் எளிதில் போக வர வசதியாக இருக்கும் விதத்தில், பள்ளிக்கூடங்கள், பிள்ளைகள் வாழும் பகுதிகளுக்கு அண்மையிலேயே இருக்கவேண்டும். இந்த மூன்று திட்டங்களும் கையாளப்படுமானல், பிள்ளைகள் கடைசிவகுப்பு வரை பயில்வார்கள் என்பது நிச்சயம்.

## 6. கட்டிடங்களும் கருவிகளும்

32. இப்போதைய ஆரம்பப் பள்ளிகளின் கட்டிடங்களும், அங்குள்ள பண்டங்கள் கருவிகளும் (Equipment), போதுமான அளவிலும் பொருத்தமான நிலையிலும் உள்ளனவா?

32. உள்ளன.

33. வழக்கமாகக் காணப்படுகின்ற பெஞ்சுகள் சாய்வு மேஜைகள் முதலியன அவசியம்தான் என்று நீங்கள் கருதுகிறீர்களா? இல்லையென்றால், இவற்றிற்குப்

33. பெரும்பாலும் அவசியம்தான். என்றாலும் முடிந்த அளவுக்கு இவற்றின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

பதிலாக எத்தகு ஏற்பாட்டைக் கையாளலாம்?

34. பள்ளிக்கூடத்தின் இடமும், அங்குள்ள பண்டங்கள் கருவிகளின் நிலையும், பொருத்தமானவையாகவும் போதுமானவையாகவும் இல்லையென்றால், அப்படி இல்லாத நிலையைச் சீர்படுத்த கீழ்க்கண்டமுறைகளில் எந்த முறை சிறந்தது?

i. பெற்றோர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் உதவி பெறுதல்.

ii. அரசாங்கத்தின் உதவி.

iii. ஷிப்ட் முறை.

iv. வேறு ஏதாவது முறைகள்.

34. முதல் இரண்டு முறைகளையும் கையாளலாம். ஷிப்ட் முறையை, சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும், வெற்றி தோல்வியை அறிவதற்காகக் கையாண்டு பார்க்கலாம்.

## 7. நிர்வாகம்

தற்போது ஆரம்பப் பள்ளிகள், கீழ்க்கண்ட பல்வேறு நிர்வாகங்களின்கீழ் இருந்து வருகின்றன.

i. அரசாங்க இலாகாக்கள்.

ii. உள்ளாட்சி மன்றங்கள்

(அ) நகராட்சி மன்றங்கள் (Municipalities).

(ஆ) மாவட்ட ஆட்சி மன்றங்கள் (District Boards).

(இ) ஊராட்சி மன்றங்கள் (Panchayat Boards).

iii. தனிப்பட்டவர்களின் நிர்வாகங்கள்.

35. ஆரம்பப் பள்ளிகள் இது போலப் பல்வேறு நிர்வாகங்களின்கீழ் இருந்துவரும் நிலை தொடர்ந்து இருக்கவேண்டும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?

36. சென்னை ராஜ்யத்தில் உள்ள எல்லா ஆரம்பப் பள்ளிகளும் ஒரே நிர்வாகத்தின்கீழ் நடத்தப்படவேண்டும் என்னும் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

37. அப்படி ஆதரிப்பதானால், அந்த ஒரு நிர்வாகம், எதுவாக இருக்கவேண்டும்?

35, 36, 37. ஆரம்பப் பள்ளிகள், இப்போது இருப்பதைப் போலவே, வெவ்வேறு நிர்வாகங்களின் கீழ் தொடர்ந்து இருப்பதைத் தவிர, இன்றைய சூழ்நிலையில், வேறு வழி ஏதுமில்லை. இந்தப் பள்ளிகள் அத்தனையும் ஒரே நிர்வாகத்தின்கீழ் வர வேண்டுமானால், அந்த ஒரு நிர்வாகம், அரசாங்கமாகத்தான் இருக்க முடியும். ஆனால் அரசாங்கத்திடமோ, அப்படிச் செய்வதற்குத் தேவையான அளவு பண வசதி இல்லை. மேலும் ஏற்கெனவே இருந்து வருகிற பள்ளிகளை ஒரு நிர்வாகத்திடமிருந்து மற்றொரு நிர்வாகத்திற்கு மாற்றுவதில் நம்முடைய நேரம் நினைப்பு முயற்சி பணம் ஆகியவற்றைச் செலவிடுவதைவிட, அவற்றை, புதிய பள்ளிக்கூடங்களைத் தொடங்கும் செயலில் செலவிடுவதே அறிவுடைமை. நிர்வாகம் யாருடையது என்பதல்ல இப்போது இருக்க வேண்டிய பிரச்சினை. பள்ளிக்கூடங்கள் எத்தனை என்பது தான் பிரச்சினை. பள்ளிக்கூடம் போக வேண்டிய வயதுடைய பிள்ளைகள் அத்தனை பேருக்கும் தேவையான அளவு பள்ளிகள் ஏற்பட்டு, அத்தனைப் பிள்ளைகளும் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, கட்டாய இலவச ஆரம்பக் கல்வி சென்னை ராஜ்யம் முழுதிலும் அமுலுக்கு வந்தபிறகு, **அன்றைய நிலையில்,** நிர்வாகம் யாரிடம் இருக்கலாம் என்பதை ஆராய்ச்சி செய்து, அதற்கு

ஏற்ற முடிவை, அப்போது வகுத்துக் கொள்ளலாம். இப்போது, நிர்வாகம், அவரவர்களிடம், இருக்கிறபடியே, தொடர்ந்து இருக்கவேண்டியதுதான்.

38. தனிப்பட்ட மனிதர்களின் நிர்வாகத்தின்கீழ் ஆரம்பப் பள்ளிகள் இருக்கும் நிலை தொடர்ந்து இருப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

38. ஆம். ஆதரிக்கிறோம்.

39. (அ) மாவட்ட ஆட்சி மன்றங்களின் நிர்வாகத்தில் ஆரம்பப் பள்ளிகள் இருக்கும் நிலை தொடர்ந்து இருக்கவேண்டுமா?

(ஆ) தன் எல்லைக்குள் இருக்கின்ற எல்லா ஆரம்பப் பள்ளிகளையும் திறமையாக நடத்த முடியாத அளவுக்கு, மாவட்ட ஆட்சி மன்றங்களின் பரப்பளவு மிக விரிவாக இருக்கிறதென்று நீங்கள் கருதுகிறீர்களா? அப்படி நீங்கள் கருதுவதாக இருந்தால் ஒவ்வொரு மாவட்டத்தையும் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து, பகுதிக்கு ஒரு கவுன்சில் அல்லது ஆட்சிக் குழுவீதம் அமைத்து, அவற்றின் மூலமாக அந்தந்தப் பகுதிகளில் உள்ள ஆரம்பப் பள்ளிகளை நடத்துவது நல்லது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

(இ) அப்படிப்பட்ட வட்டாரக் குழுக்களின் அமைப்புமுறையும், பணியாற்றும் வகையும் எத்தகையனவாய் இருத்தல் நல்லது என்பது உங்கள் கருத்து?

39. (அ) இருக்கவேண்டியதுதான்.

39. (ஆ) மாவட்ட ஆட்சி மன்றங்களின் பரப்பளவு மிக் விரிவாகத்தான் இருக்கிறது. வட்டாரக் குழுக்கள் அமைத்து அவற்றின் மூலம் அந்தந்த வட்டத்தில் உள்ள பள்ளிகளை நடத்துவது நல்ல முறைதான்.

(இ) வட்டார ஆட்சிக் குழு ஒவ்வொன்றும் எட்டு உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கலாம். மூவர், மாவட்ட ஆட்சி மன்றத்தின் பிரதிநிதிகளாகவும், இருவர் குறிப்பிட்ட வட்டாரத்தில் பணியாற்றும் ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதிகளாகவும், இருவர் குறிப்பிட்ட வட்டாரத்தைச் சேர்ந்த பொதுமக்களின் பிரதிநிதிகளாகவும், ஒருவர் மாவட்ட ஆட்சி மன்றத்தால் நியமிக்கப்பட்டு, பள்ளிக்கூடங்களை நடத்திச் செல்லும் அதிகாரியாகவும் இருக்கலாம். மேற்படி அதிகாரியே, குழுவின் செயலாளராகவும் இயக்குநராகவும் இருக்கலாம். மாவட்ட ஆட்சி மன்றத்திடம் இருக்கவேண்டிய சில

குறிப்பிட்ட மேலதிகாரங்கள் போக, ஏனைய எல்லா அதிகாரங்களும், இந்த வட்டாரக் குழுவிடம் இருக்கலாம்.

40. வெவ்வேறு மதத்தினர்க்கு வெவ்வேறு பள்ளிக் கூடங்கள் இருக்கவேண்டும் என்கிற கொள்கையை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

40. இல்லை. மதத்திற்கும் பள்ளிக்கூடத்திற்கும் தொடர்பே இருத்தல் கூடாது என்பது நம் கருத்து.

41. அப்படிப்பட்ட பள்ளிகள் இருப்பதை எல்லா மதத்துப் பெற்றோர்களும் ஆதரிக்கிறார்களா?

41. இல்லவே இல்லை.

42. ஆசிரியர்களே மானேஜர்களாகவும் இருக்கும் முறை தொடர்ந்திருக்கவேண்டுமென்று விரும்புகிறீர்களா?

42. ஆமாம்.

43. ஆரம்பப் பள்ளிகளை, வேறு நிர்வாகங்களிடமிருந்து ஊராட்சி மன்றங்களிடம் (Panchayat Boards) மாற்றித் தரலாம் என்னும் கருத்தை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

43. இல்லை.

## 8. ஆசிரியர்கள்

44. கீழ்க்கண்ட வகை ஆசிரியர்களில் எவ்வகை ஆசிரியர்கள் ஆரம்பப் பள்ளிகளில் இருத்தல் வேண்டுமென்பது உங்கள் கருத்து?

i. எலிமெண்டரி கிரேட்

ii. செகண்டரி கிரேட்.

iii. இரண்டு வகையினரும்.

44. இரண்டு வகையினரும் இருக்க வேண்டியதுதான். முதல் வகையினர், ஐந்தாவது வகுப்பு வரையிலும், இரண்டாவது வகையினர் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் சொல்லித்தரலாம்.

45. கீழ்க்கண்ட முறைகளில் எதனை நீங்கள் விரும்புகிறீர்கள்?

45. ஒரே வகையான சம்பள விகிதம் முதலியன இருப்

i. எந்த நிர்வாகத்தின்கீழ்ப் பணியாற்றினாலும் எல்லா ஆசிரியர்களுக்கும் ஒரே வகையான சம்பள விகிதம், அலவன்ஸ் திட்டம், லீவ் விதிகள் முதலியன இருத்தல்.

ii. வெவ்வேறு நிர்வாகத்தின் கீழ்ப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வெவ்வேறு வகையான சம்பள விகிதம், அலவன்ஸ் திட்டம், லீவ் விதிகள் முதலியன இருத்தல்.

பல்வேறு நிர்வாகங்களின் கீழ்ப் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவருக்கும் ஒரே வகையான ஊதியம் முதலிய விகிதங்களை ஏற்படுத்துவதால், மாவட்டம் முழுதிலுமாக மாற்றப்படக்கூடிய நிலையில் உள்ள ஜில்லா போர்ட் பள்ளிகளுக்கு, ஆசிரியர்கள் கிடைப்பது பாதிக்கப்படுமா?

பமே சிறந்த முறை. நிர்வாகம் வேறுபடுகிறது என்கிற காரணத்திற்காக, ஒரே வகையான தகுதி படைத்து ஒரே வகையான பணியைப் புரிகின்ற பல்வேறு ஆசிரியர்களுக்கிடையே சம்பளம் முதலியவற்றில் வேறுபாடு இருப்பது எப்படி முறையாகும்? ஒரே வகை ஊதியம் இருப்பதால் ஜில்லா போர்ட் பள்ளிகளுக்கு ஆசிரியர்கள் கிடைப்பது அரிதாகிவிடும் என்பது தவறான கருத்து மட்டுமல்ல, தேவையில்லாத அச்சமும் ஆகும்.

46 (அ) திறமை மிகுந்தவர்கள் ஆசிரியத் தொழிலுக்கு வர வேண்டுமானால், ஆரம்ப ஆசிரியர்களின் சம்பள விகிதமும், ஆசிரியத் தொழில் தொடர்பான ஏனைய விதிமுறைகளும் எவ்வாறு இருக்கவேண்டுமென நீங்கள் கருதுகிறீர்கள்?

46. (அ) **திறமை மிகுந்தவர்கள் ஆசிரியத் தொழிலுக்கு வரவேண்டுமானால், ஊதியம் அலவன்ஸ் இரண்டும் சேர்த்து ஹையர் கிரேட் ஆசிரியர்களுக்கு, மாதம் எண்பது ரூபாயும், செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு மாதம் நூறு ரூபாயும் கிடைத்தாக வேண்டும்.** ஆரம்ப ஆசிரியர்களாக உள்ளவர்கள், தேர்தல்களில் நிற்கக் கூடாது என்று உள்ள அரசாங்க உத்தரவு ஒழிக்கப்படவேண்டும் ஆரம்ப ஆசிரியர்களின் பிள்ளைகள், S. S. L. C. வகுப்பு முடிய சம்பளம் இல்லாமலும், கல்லூரி

வகுப்புகளில் அரைச் சம்பள அளவோடும் படிக்கலாம் என்கிற வசதி செய்துதரப்பட வேண்டும். பாதிக் கட்டணத்தில் ரயில் பிரயாணம் செய்யவும் அவர்களுக்கு வசதி செய்யப்படவேண்டும். அரசாங்க அதிகாரிகளும் சரி, அமைச்சர்களும் சரி, ஆரம்ப ஆசிரியர்களே அரும்பணி புரிபவர்கள் என்று வாயளவில் சொன்னால் மட்டும் போதாது, செய்கையில் அதற்கு ஏற்றபடி ஆசிரியர்களுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும்.

(ஆ) ஒரே நிர்வாகத்தின்கீழ் உள்ள பல பள்ளிகளில், ஒன்றிலிருந்து ஒன்றிற்கு ஆசிரியர்களை மாற்றுவது விரும்பத்தக்க முறை தானா?

(ஆ) விரும்பத்தக்க முறை அல்ல. அப்படி அடிக்கடி மாற்றுவதால், ஆசிரியர்களுக்குப்பலவித சங்கடங்கள் உண்டாகின்றன. ஆசிரியர்களுடைய பிள்ளைகளின் படிப்பு இடையிடையே தடைப்பட்டுப் பாழாகிவிடுகிறது. அடிக்கடி ஊர்விட்டு ஊர் குடும்பத்தை மாற்றுவதால், அடிக்கடி பணச் செலவு ஏற்படுவதோடு, குடும்ப அமைதியும் கெட்டுவிடுகிறது.

47. ஆசிரியர்களின் நிலைமையை உயர்த்தவும், அவர்களின் தொழிலை நிலையானதாக்கவும், நீங்கள் தரக்கூடிய கருத்துக்கள் யாவை?

47. மேற்கண்ட கேள்வியின் முதல் உட்பிரிவுக்குத் தரப்பட்டுள்ள அதே விடை இதற்கும் பொருந்தும்.

48. ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளில் தற்போதுள்ள பாடதிட்டம் திருப்திகரமானதுதானா?

48. திருப்திகரமானதுதான்

49. இல்லையென்றால், அதில் என்னென்ன மாறுதல்கள் செய்யப்படல் வேண்டும்?

49.

50. தன்னுடைய ஆசிரியப் பயிற்சிக் காலத்தில், ஒவ்வோர் ஆரம்ப ஆசிரியரும், பயிர்த் தொழில், தோட்டவேலை, ஏதாவதோர் முக்கியமானகைத்தொழில் ஆகியவற்றில் நடைமுறைப் பயிற்சி பெறவேண்டியது இன்றியமையாதது என எண்ணுகிறீர்களா?

50. பெற்றே தரவேண்டும் என்பது அவசியமில்லை. விருப்பமுள்ளவர்கள் பயிற்சி பெறலாம் என்கிற ஏற்பாடு இருக்கலாம்.

51. தொடக்க வகுப்புகளுக்காக, இப்போது இருப்பதைவிட இன்னும் அதிகமான அளவில், பெண் ஆசிரியர்களை நியமிப்பதை நீங்கள் வரவேற்கிறீர்களா?

51. ஆம். வரவேற்கிறோம்.

52. i. ஆசிரியர் கழகங்களின் கூட்டங்கள் ii ஆசிரியர்களுக்கான உயர்தரக் கல்வி வகுப்புகள் iii நூல் நிலையப் பணி iv. ஆசிரிய மாநாடுகள் ஆகிய முறைகளின் மூலமாக ஆசிரியர்களின் திறமையை அதிகப்படுத்த எவ்வெவ் வழிகளை நீங்கள் தெரிவிக்க இயலும்?

52. இந்த நான்கு முறைகளையும் தவறாமலும் தொடர்ச்சியாகவும் நடத்தி வந்தாலே போதும். தகுந்த பயன் ஏற்பட்டே தீரும்.

## 9. இன்ஸ்பெக்ஷன்

53. பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்கள் இப்போது இருப்பதைவிட இன்னமும் திறமைவாய்ந்த வழிகாட்டிகளாகப் பணியாற்ற வேண்டுமானால் யாது செய்யப்படுதல் வேண்டும்?

53. பள்ளிக்கூட நிர்வாகிகளை நட்புமுறையில் அணுகி, அன்பு வழியில் பழகி, அருமையான கருத்துக்களை இனிமையாக எடுத்துச் சொல்லி, பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்தை நாடும் பண்பு இன்ஸ்பெக்டர்களிடம் வளரவேண்டும்.

54. திறமை குன்றாத அளவில் எத்தனைப் பள்ளிகளை ஓர் ஆண்டில் ஓர் இன்ஸ்பெக்டர் பரிசோதிக்க முடியும்?

54. சுமார் 50 பள்ளிகள்.

55. ஆண்டிற்கு எத்தனை முறை இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடங்களைப் பார்வையிடல் வேண்டும்?

55. இரண்டு முறைகள்.

56. பொதுமக்களின் பிரதிநிதிகள் பள்ளிக்கூடங்களை மேற்பார்வையிடுவது விரும்பத்தக்கதா?

56. பார்வையாளர்கள் என்கிற முறையில்பார்வையிடுவதும், பள்ளிக்கூடங்களின் முன்னேற்றத்திற்கான வழிவகைகளைத் தலைமையாசிரியர்களிடம் நட்பு முறையில் தெரிவிப்பதும் வரவேற்கத்தக்கனவே. ஆனால் அதிகார முறையில் பார்வையிடுவதோ, தலைமையாசிரியர்களையும் ஏனைய ஆசிரியர்களையும் ஆணை இடுகிற நிலை பெறுவதோ கூடாது.

57. ஆரம்பப் பள்ளிகளை, அண்மையிலுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகள், செகண்டரி பள்ளிகள் அல்லது பயிற்சிப் பள்ளிகள் இவற்றின் தலைமையாசிரியர்கள் மூலம் மேற்பார்வையிடும் முறையை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா?

57. சில குறிப்பிட்ட பகுதிகளில், பரீட்சார்த்தமாக இந்த முறையைக் கையாண்டு பார்க்கலாம்.

## 10. பொதுமக்களின் கூட்டுறவு

58. பள்ளிக்கூடங்களுக்காக, நிலம் தானமாகப் பெறுவது நடைமுறையில் சாத்தியமா?

58. ஜில்லாவுக்கு ஒன்று வீதம், எல்லா ஜில்லாக்களிலும், எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளையும் கொண்ட மக்கள் குழுக்களை (People's Committee) அமைத்து, அந்தக் குழுக்களின் மூலம், ஆர்வம் ததும்பும் முறையிலும் நாணயம் நிறைந்த வகையிலும் முயற்சி செய்தால், ஓரளவுக்கு நிலங்களைத் தானமாகப் பெறுவது இயலக்கூடியதே.

காஞ்சீபுரம் பச்சையப்பன் கல்லூரியை நடத்துவதற்காக அந்த நகரத்தைச் சேர்ந்த நல்லறிஞர் ஒருவர், தன் முழுச் சொத்தாக இருந்த 50,000 ரூபாய் பெறுமானமுள்ள எல்லா நிலங்களையும் தானமாகக் கொடுத்திருக்கிறார் என்பது இங்கே குறிப்பிடத் தக்கது.

59. பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய பண்டங்கள் கருவிகள் வாங்குவதற்காக நன்கொடை பெறுவது இயலக்கூடியதா?

59. இந்தக் கேள்விக்கும் மேலே குறிப்பிட்ட விடை பொருந்தும். அரசாங்கத் தோரணையில் அதிகாரிகளின் மூலமாக உருட்டி மிரட்டிக் கேட்காமல், மக்கள் குழுக்களை அமைத்து, அன்பும் பணிவும் செறிந்த முறையில் கேட்டால் பெரிய அளவில் நன்கொடையைத் திரட்டமுடியும். ஜில்லாதோறும், தாலுகாதோறும், கிராமந்தோறும் நன்கொடை திரட்ட முடியும். இது தவிர, சென்னை ராஜ்யம் முழுமைக்குமாக, சென்னை ராஜ்ய ஆரம்பக் கல்வி நிதி என்கிற பெயரால், நன்கொடை திரட்டும் இயக்கம் ஒன்று, கவர்னர் அவர்கள் பெயரால் மிகப் பெரிய அளவில் தொடங்கப்படவேண்டும். பல்வேறு அரசியல் கட்சிகளின் ஒத்துழைப்பை நாடுவது, இசைவாணர்கள் நடிகர்கள் நடனமணிகள் ஆகியோரைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள் நடத்துவது, பெரிய பெரிய தொகைகளாகத்தான் கிடைக்கவேண்டும் என்று எண்ணாமல் கால் கால் அணுக்களாக வந்தாலும் மனமுவந்து ஏற்றுக் கொள்வது, மிகப் பெரிய

கோயில்கள் மடங்கள் அறநிலையங்கள் ஆகியவற்றில் வீணாக முடங்கிக் கிடக்கும் செல்வக் குவியலில் ஒரு பகுதியை அன்பு கூர்ந்து தரும்படியாக வேண்டுவது, முதலான பலவகை முறைகளைக் கையாண்டால் நல்லதோர் நிதி நிச்சயம் கிடைக்கும். பல கோடி ரூபாய் என்கிற அளவில் கிடைக்காமல் சில இலட்சம் ரூபாய் என்கிற நிலையில் கிடைத்தாலும், கிடைத்த வரையில் நல்லதுதானே? கிடைக்கும் தொகையைக் கொண்டு நூறு அல்லது இருநூறு ஆரம்பப் பள்ளிகளையாவது தொடங்கலாமல்லவா ?

60. முதியவர் பள்ளிகளை நடத்துவது, மாலை நேரத்தில் வட்டார மக்கள் ஒன்றுகூடி ரேடியோ கேட்பது, முதியவர்களுக்கான கலைத்துறை பொழுதுபோக்குத் துறை நிகழ்ச்சிகளை நடத்துவது முதலான செயல்களுக்கு, பள்ளிக்கூடங்களில் இப்போதுள்ள வசதிகளை, எந்த அளவுக்குப் பயன்படுத்தமுடியும் ?

60. சிற்றூர்ப் பகுதிகளில் பஞ்சாயத்து மன்றங்களும், நகரப் பகுதிகளில் நகராட்சி மன்றங்களும் கவலையெடுத்துக் கொண்டு காரிய மாற்றினால், இந்தச் செயல்களை, இப்போதுள்ள வசதிகளைக் கொண்டே, சிறந்த அளவில் நடத்தமுடியும்.

61. கலைகள் கைத்தொழில்கள் ஆகியவற்றில் தேர்ச்சிபெற்றவர்களாய் உள்ள பொது மக்களின் ஒத்துழைப்பைப் பள்ளிக்கூட நடவடிக்கைகளுக்காகப் பெற வேண்டுமானால், அதற்கு எத்தகு முறைகளை மேற்கொள்ளமுடியும்?

61. இது நடக்காத காரியம்.

62. பெற்றோர் சங்கங்கள் இப்போது பணியாற்றும் முறை திருப்திகரமாக உள்ளதா? அக் கழகங்களின் முன்னேற்றத்திற்

62. வெறும் ஆண்டுவிழாக்களையும் ஏனைய விழாக்களையும் நடத்துவதோடில்லாமல், பெற்றோர் சங்கங்கள், அவ்வப்போது

காக எத்தகு திட்டங்களை மேற்கொள்ளப்படவேண்டுமென்பது உங்கள் விருப்பம்?

நாட்டில் ஏற்படுகின்ற கல்வித் தொடர்பான பிரச்சினைகளை அலசி ஆராயவும், அவற்றைப் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை கூறவும் முன்வரவேண்டும்.

## 11. பொது

(அ) செகண்டரி கல்வியுடன் தொடர்பு.

63. கீழ்க்கண்டவற்றில் எதை நீங்கள் விரும்புகிறீர்கள்? (1) 8 வருஷம் படித்த எல்லா மாணவர்களையும் பரீட்சிக்காமலே 9-வது வகுப்பு அல்லது 4—வது பாரத்தில் சேர்ப்பது (2) 8 வருஷப் படிப்பிற்குப்பின் அவர்கள் படித்த பள்ளிப் பரீக்ஷையில் தேறி அத்தாட்சிப் பத்திரம் பெற்ற மாணவர்களை மட்டும் 9—வது வகுப்பு அல்லது 4—வது பாரத்தில் சேர்ப்பது, (3) 8 வருஷப் படிப்பு முடிந்த பின் வெளியிலிருந்து பரீக்ஷை நடத்தி, அதில் தேறும் மாணவர்களை மட்டும் 9—வது வகுப்பு அல்லது 4-வது பாரத்தில் சேர்த்துக் கொள்வது.

63. இரண்டாவது முறையே சிறந்தது.

(ஆ) ஆரம்பக் கல்விக்கு முன்.

64. மூன்று வயது முதல் 7 வயது வரை உள்ள குழந்தைகளுக்காக பூர்வாங்க ஆதாரப் பள்ளி, நர்ஸரிபள்ளி, கிண்டர் கார்டன், மாண்டிஸோரி முதலிய பள்ளிகள் போன்ற பூர்வாங்கக் கல்விப் பள்ளிகள் அதிகம் ஆரம்பிக்கப்படுவதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா? (ஆம் அல்லது இல்லை என்று பதில் அளிக்கவும்.)

64. ஆம். மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்

65. அத்தகைய பள்ளிகள் அதிகம் ஆரம்பிப்பதை நீங்கள் ஆதரிப்பதானால் அவற்றை ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்துவதை ஆதரிக்கிறீர்களா? சர்க்கார் நடத்துவதை ஆதரிக்கிறீர்களா? அல்லது தனிப்பட்ட ஸ்தாபனங்கள் நடத்துவதை ஆதரிக்கிறீர்களா?

65. இந்த மூவகை நிர்வாகங்களில் எங்கெங்கே யார்யாரால் முடியுமோ அங்கங்கே அவரவர்களைக் கொண்டு நடத்துவது நல்லது.

(இ) குறைபாடு உள்ள குழந்தைகளின் கல்வி.

66. நம் ராஜ்யத்தில் ஊமை, செவிடு, குருடு போன்ற குறைபாடு உள்ள குழந்தைகளின் கல்விக்கு என்ன வசதிகள் இருக்கின்றன?

66. இரண்டோர் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

67. அவை போதுமென்று நினைக்கிறீர்களா? இல்லையானால் அவற்றை அபிவிருத்தி செய்ய நீங்கள் கூறும் யோசனை என்ன?

67. போதாது. அவர்களுக்காக மேலும் சில பள்ளிகள் தொடங்கப்படவேண்டும். என்றாலும் இந்தப் பிரச்சினையில் இப்போது கருத்தைச் செலுத்த வேண்டியது கட்டாயமில்லை. நாட்டுக்குத் தேவையான அளவு ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி முடித்தபிறகு இதுபோன்ற செயல்களில் ஈடுபடலாம்.

(ஈ) பிரத்யேகப் பள்ளிகள்.

68. எல்லா ஆரம்ப வகுப்புகளிலும் ஆங்கிலத்தில் போதிக்கப்படும் கான்வெண்ட் பள்ளிகள் போன்ற பாடசாலைகள் பற்றி உங்கள் கருத்து என்ன?

68. இப்போது இருப்பது போலவே அத்தகு பள்ளிகள் தொடர்ந்து இருக்கலாம். அவற்றில் சேர்ந்து படிக்க விரும்புவோர் அப்படியே செய்யட்டுமே, நமக்கென்ன நஷ்டம்?

69. அத்தகைய பாடசாலைகளுக்குச் சர்க்கார் உதவி அளிப்பதை ஆதரிக்கிறீர்களா?

69. ஆமாம்.

(உ) ஆரம்பக்கல்வி பற்றி ஆராய்ச்சி.

70. ஆரம்பக் கல்வி பற்றி விஞ்ஞான முறையில் விரிவாக ஆராய்ச்சி நடத்தி சர்க்காருக்கு அவ்வப்பொழுது ஆலோசனை கூற ஒரு சிறிய கல்வி ஆராய்ச்சி நிலையம் அமைப்பதை நீங்கள் ஆதரிக்கிறீர்களா?

70. ஆமாம்.

71. ஆதரிப்பதானால் அந்த நிலையம் (1) கல்வி இலாகாவுடன் இணைந்திருக்கலாமா? (2) சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்திருக்கலாமா? (3) வேறு ஏதாவது அமைப்புகளுடன் இணைந்திருக்கலாமா?

71. பல்கலைக் கழகத்துடன் இணைந்திருப்பதே நல்லது.

72. ஆராய்ச்சி நடத்துவதற்கு நீங்கள் வேறு என்ன யோசனை கூறுகிறீர்கள்?

72. மேலே தெரிவிக்கப்பட்ட அமைப்பு ஒன்றே போதும்.

---

## உதிர்ந்த முத்துக்கள்

(தொகுத்தவர் S. ஜோசப்)

படிக்கத் தகுந்த நூல்களைவிட படிக்கத் தகாத நூல்களே உலகத்தில் ஏராளம்.

—தாகூர்.

உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

—இயேசு கிறிஸ்து.

கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கிறது; உன் கண் தெளிவாயிருந்தால், உன் சரீரம் முழுவதும் வெளிச்சமாயிருக்கும். உன் கண் கெட்டிருந்தால், உன் சரீரம் முழுவதும் இருளாயிருக்கும்.

—இயேசு கிறிஸ்து.

## தொடக்கக் கல்வி ஆய்வுக்குழு உறுப்பினர் நியமனத்தில் ஏமாற்றம்

நடைமுறையில் இருந்துவரும் தொடக்கக் கல்வியை ஆராய நியமிக்கப்பட்டுள்ள ஆய்வுக் குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் பெயர்கள், பெரும்பான்மையினரான சென்னை ஆசிரியர்களுக்குத் திருப்தி தருவதாக இல்லை.

குழுவின் உறுப்பினர்களாக இடம் பெறுவதற்கான சிறப்பியல்கள், நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் சிலரிடமாவது இருக்கின்றனவா என ஆசிரியர்கள் ஐயுறுகின்றனர். அக்குழுவில் இடம் பெறுவதை மெய்ப்பிப்பதற்கான, தொடக்கக் கல்வியில் முதிர்ந்த பயிற்சி பெற்றிருப்பவராக, ஒருவர்கூட அக்குழுவில் கிடையாது என அவ்வாசிரியர்கள் கருதுகின்றனர்.

கிறிஸ்துவக் கல்வித் துறையினர், கல்வி வளர்ச்சிக்காகச் செய்து வரும் சேவைகளை, அமைச்சர்களும் மற்றப் பொதுவாழ்வினரும், தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் பொழுதெல்லாம் சிறப்பித்துப் புகழ்ந்துள்ளனர். அவர்களில் ஒருவருக்குக்கூட அக்குழுவில் இடம் தராதது வியப்புக்குரியதாக இருக்கிறது.

சென்னை நகராட்சி மன்றத்தில் முன்னாள் கல்வி அதிகாரியாக இருந்தவரும், சமீப காலம் வரை தொடக்கக் கல்வித்துறை அதிகாரியாக இருந்தவரும், இப்பொழுது மாநில கல்வித் துறை அதிகாரியாக இருப்பவருமான ஒருவரைத் தவிர்த்து, குழுவில் இடம் பெற்றுள்ள மற்றவர்கள், தொடக்கக் கல்வியைக் குறித்துப் பெற்றுள்ள படிப்பினை மூடுமந்திரமாகவே உள்ளது.

தங்கள் ஆயுட்காலம் முழுதும் தொடக்கக் கல்வி போதனையிலேயே செலவழித்து வந்துள்ளவர்களில் ஒருவராவது, ஆய்வுக் குழுவில் இடம் பெறாதது, கல்வித் துறையினருக்குப் பேராச்சரியமளிப்பதாக இருக்கிறது.

—இவ்வாறு, சென்னை 'மெயில்' நிருபர், சென்னை ஆசிரியர்கள் பலரின் கருத்தைத் திரட்டித் தந்துள்ளார்.

CONNEMARA PUBLIC LIBRARY
6 - AUG 1958
MADRAS

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. Sc., L.T.,)

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 5 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 18 | 19–5–'54 |

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 8 | 19–5–'54 |

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T,

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 8 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 14 | 19–5–'54 |

## நர் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T

T. S. உமாபதி, M. A., L. T.,

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 10 | 19–5–'54 |

## பாலர் இந்து தேச சரித்திரம்

M. பாலசுப்பிரமணியம், M. A.

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 7 | 19–5–'54 |

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 13 | 19–5–'54 |

V K. சேஷாத்திரி, B, A.,L. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றும் வகுப்பு | 0 7 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 12 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

**Mother India English Reader Primer - I 0 5 0**

## பாலூர பூகோளமு (Telugu)

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

Regd No. M, 1508

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு
(For Higher Ele Schools)

### வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்
(Vidwan- V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 23 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | 41 | 19-5-'54 |

### புதுமுறை சங்கக் கணிதங்கள்
(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 2 | 0 | 15 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 15 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 16 | 19-5-'54 |

### சமூக நூல்
(T. S. Umapathy, M. A., L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 1 | 4 | 0 | 38 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |

### அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |

Printed at the Venkatesan Press, Madras—1.